# ராஜபார்ட்டும் - ரங்கதுரையும்!

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 9—4—1978 | இதழ் 30

## கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

அ. தி. மு. க. ஆட்சி என்றாலே அங்கு ஆளுங்கட்சியின் தலையீடு இருக்கவே இருக்காது என்பதுபோன்ற ஒரு மாயையைத் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள் அல்லவா; அந்த மாயைத்திரையில் கடந்த ஏழெட்டு மாதங்களுக்குள்ளாகவே பல கிழிசல்கள் ஏற்பட்டுவிட்டன என்பதற்கு ஏராளமான சான்றுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஒரு தாழ்த்தப்பட்ட தோழரின் இல்லத்தை ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தலைமையில் சென்று தரைமட்டமாக இடித்துப் போட்ட கொடுமையைத் தமிழகச் சட்டமன்றத்திலேயே பல கட்சிகளின் சார்பிலும் சுட்டிக் காட்டப்பட்டது. அது பற்றிக் கவனிக்கப்படும் என்ற ஒரு பதிலைக் கூட அரசுத் தரப்பிலிருந்து பெறமுடியவில்லை.



என் மகனையா கைது செய்தாய்? என்று ஆர்த்தெழுந்து தோள் தட்டித் தொடை தட்டிக் காவல் நிலையத்துக்குள் புகுந்து, அதிகாரிகளுக்கு ஆபாச அர்ச்சனை நடத்திவிட்டு, பலாத்காரமாக மகனை விடுவித்துக் கொண்டு போனார் ஒரு ஆளுங்கட்சி எம். எல். ஏ.! இதைப் பற்றி வாய் திறக்க அமைச்சர்களில் யாருக்கும் துணிவிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் அந்த அமைச்சர்கள், தங்கள் ஆளுகையின் புனிதம் பற்றிப் பேசிக்கொள்வதோ; கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது.

இதோ, அ. தி. மு. க. ஆளுகின்ற புதுவை மாநிலத்திலிருந்து ஒருசெய்தி! புதுவையின் முதலமைச்சரே நீதி நிர்வாகத்தில் தலையிட்டார் என்று மாவட்டக்கலெக்டரே முதலமைச்சருக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். மாவட்டக் கலெக்டர், ரெவின்யூகோர்ட் நீதிபதி என்ற முறையில் குடியிருப்புச் சட்டம் சம்பந்தமான வழக்கொன்றை விசாரித்திருக்கிறார். அந்த வழக்கில் புதுவை மாநிலம்ஏம்பலம்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் "புனிதமான" எம். ஜி. ஆர். கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்! இந்த வழக்கிற்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர் வேண்டுகோளுக்கிணங்கப் பல "வாய்தா"க்கள் கொடுக்கப்பட்டு விட்டன. இறுதியாக இந்த வழக்கு ரெவின்யூகோர்ட் நீதிபதி(மாவட்டக்கலெக்டர்) முன்பு வந்த நேரத்தில் தனக்குச் சாதகமான தீர்ப்பைச் சட்டமன்ற உறுப்பினர் பெற நினைத்து முதலமைச்சரை அணுகினார். உடன் முதல்வர் என்ன செய்தார்!

"ஆகா! என்ன பாபகரமான வார்த்தையைப் புகன்றாய்! ஏ! துராத்மா! தூயவர் எம். ஜி. ஆர். கட்சியில் இப்படியும் ஒரு பாதகமா? உன்முகத்தையும் பாரேன்! ஓடிவிடு!" என்று கூறினாரா? அப்படித்தானே கூறியிருக்க வேண்டும்! அதுதான் இல்லை! புனித ராஜ்யம் அல்லவா? தொலைபேசியை எடுத்து ரெவின்யூ கோர்ட் நீதிபதியிடம் பேசினார். தன் கட்சி எம். எல். ஏ.க்குச் சாதகமான தீர்ப்பு வழங்குக; அல்லது நீண்ட வாய்தா அளித்திடுக என்று திட்டவட்டமாக அறிவித்தார். தொலைபேசி போதாதென்று இதே கருத்தை எழுத்து மூலமும் அனுப்பினாராம். ஆனால் முதல்வரின் பரிந்துரையை மாவட்ட கலெக்டராகவும் ரெவின்யூ கோர்ட் நீதிபதியாகவுமுள்ள ரங்கதுரை என்பார் ஏற்றுக்கொள்ளவில்லை; உறுதியாக மறுத்துவிட்டார். உடனே பாண்டி முதலமைச்சர் சினமடைந்து "பளா!பளா! உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று "ராஜபார்ட்" வசனங்களை வாரி இறைக்கத் தொடங்கினார். "நீதிபதி அந்தஸ்தில் தாம் கடமையாற்றும்போது முதலமைச்சர் தலையிடக் கூடாது. முடியாது — என்று ரங்கதுரை திடமாகக் கூறிவிட்டாராம்.

"ராஜபார்ட் வசனம்" வீணாகப் போகலாமா? விழலுக்கிறைத்த நீராகலாமா? எனவே முதலமைச்சர் எடுத்தார் பேனாவை! எழுதினார் உத்திரவை! மாவட்டக் கலெக்டரை உடனடியாகப் பதவிப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதாக ஆணை பிறந்தது! அதுவும் அந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு ஒரு நாள் முன்னதாக முன்தேதியிட்டு உத்திரவு பிறப்பிக்கப் பட்டதாம். இப்படி முன்தேதியிட்டது சரியில்லை என்று புதுவை அரசின் தலைமைச் செயலாளரும் கூறியிருக்கிறார். அதை மாநில கவர்னர் குல்கர்னியும் ஏற்றுக் கொண்டார். அதனால், ராஜபார்ட்டின் கோபத்திற்கு ஆளான ரங்கதுரை மாவட்டக் கலெக்டர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

அத்துடன் விவகாரம் முடியவில்லை. தன்னுடைய நீதி பரிபாலன விவகாரத்தில் அத்து மீறித் தலையிட்டது குறித்துக்காரணம்காட்டுமாறு ரங்கதுரை, முதலமைச்சருக்கு நோட்டீசும் கொடுத்திருக்கிறாராம்! இந்தப் பிரச்சினையை மத்திய அரசின் நீதித் துறை, சட்டத்துறை, உள்துறை அமைச்சகங்களின் ஆய்வுக்குப் புதுவை கவர்னர் குல்கர்னி அனுப்பியிருக்கிறாராம்.

உடன்பிறப்பே, தவறு செய்பவர் யாராயினும் நடவடிக்கை எடுப்பேன் - ஊழல் எங்கள் ஆட்சியில் தலைகாட்டாது — என்று ஒரு மணி நேரப் பேச்சில் ஓராயிரம் தடவை கூறும் புனித ராஜ்யத்தின் தலைவர் நண்பர் எம்.ஜி.ஆர், தலைமையில் உள்ள கட்சியின் முதல்வர் ஒருவர் நீதி நிர்வாகத்தில் தலையிட்ட இந்த நிகழ்ச்சியைப் பாவம்; பத்திரிகைகளாலும் மறைக்க முடியவில்லை!

மத்திய அரசுதான் என்ன செய்யும் என்று பார்ப்போமே! பாரபட்சமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பது ஜனதா அரசின் முழக்கமாக இருந்தாலுங்கூட செயல் முறையில் எதையும் காணோம், வேண்டியவர் — வேண்டாதார் என்ற நிலையிலேயே அங்கும் காரியங்கள் நடைபெறுகின்றன.

பாண்டி விஷயத்திலும் அதேதான் நிலைமையா? என்பதை விரைவில் தெரிந்து கொள்ளலாம்.

# புதுவையில் ஒரு புனித ராஜ்யம்!

# பீகாரில் 'பெரும் புயல்'

இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலம் பீகார் ஆகும். பொருளாதார ரீதியில் பெருத்த வளர்ச்சி இல்லை என்றாலும் அரசியல் ரீதியில் இந்தியாவை அது ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. காரணம், அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னகத்தேகொண்டுள்ளதுதான்; மக்கள் தொகைக்கேற்ப இந்த வாய்ப்பு இதற்குக் கிட்டியுள்ளது. அதோடு மட்டுமல்ல, அரசியல் சட்டத்தால் ஆட்சி மொழித் தகுதியைப் பெற்றுவிட்ட இந்தி மொழியின் இரண்டாவது இல்லமும் பீகார் ஆகும்.

இன்றையதினம் சுமார் ஆறு கோடி மக்களைத் தாங்கி வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது பீகார். சாதிக் கொடுமை ஒருபக்கம்; சாதிகளோ ஏராளம். அதன் விளைவுகளே ஆர்ப்பாட்டங்கள்! உயர்சாதிகள் என்போர் நான்கு பிரிவுகளாக உள்ளனர். 42 இலட்சம் பார்ப்பனர்களும் ஏழு லட்சம் கயஸ்தர்களும் இருபத்தெட்டு லட்சம் ராஜபுத்திரர்களும், பதினெட்டு லட்சம் பூமியர்களும் சேர்ந்து பீகாரின் மொத்த மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்காக இருந்தாலும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் இவர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

முன்னேறிய சமூகங்களின் ஆதிக்கத்தை அகற்றிட நமது கலைஞரைப் பின்பற்றி ஆளுங் கட்சி ஓர் அரிய திட்டத்தை தீட்டியுள்ளது. பீகாரில் இன்று பின்தங்கிய வகுப்பார்களில் 128 பிரிவினர் உள்ளனர். இந்தப் பிரிவினர்களில்கூட நில உரிமை படைத்தவர்களாக யாதவர்கள், குர்மியர்கள், கௌரவர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள். யாதவர்கள் அரைக்கோடி மக்களே, குர்மியர்கள் இருபத்தொரு இலட்சம் மக்களே, கௌரவர் 18 லட்சம் என்றாலும் பனியா சமூகம் உட்பட இந்தப் பின்தங்கிய சமூகங்களிடையே முன்னேறியவர்களும், வளம் பெற்றவர்களும் இவர்களே. அரசியலில் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்டவர்களுமாவார்கள். மற்றும்பின் தங்கியவர்களிடையே பெரும்பாலான சாதிகள் கூலிவேலை செய்வோர், கைவினைஞர்கள் ஆவர்.

இந்தச் சாதியினர் நிலமற்றவர்களே. தாழ்த்தப்பட்டவர்கள் மலைசாதியினர் ஆகியோர் போன்றே ஏமாற்றப்பட்டுள்ளனர். இதுகாறும் அரசியல் பிரதிநிதித்துவமோ, வேலைவாய்ப்பில் ஒதுக்கீடுகளோ செய்யப்படவில்லை. வஞ்சிக்கப்பட்டே வந்திருக்கின்றனர். மேலும் கிராமஞ் சார்ந்த சிறுபான்மை சாதிகளான கும்மார், கானு, கோர்ன், கட்வார், தானுக், நேய் பார்ராயி போன்ற பிற்படுத்தப்பட்டவர்கள்கூட இதுகாறும் ஏமாற்றத்திற்கே ஆளாக்கப்பட்டு வந்துள்ளனர்.

எல்லாச் சமூகத்தைச் சார்ந்தவர்களும் ஏற்றம் பெற்றிட அரசு எடுத்த நடவடிக்கையே பின்தங்கிய சமூகத்திற்கு வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு செய்கிற சீரிய திட்டமாகும். பின்தங்கிய சமூகத்திற்கு பொருளாதார வளர்ச்சி

**சா. கணேசன்**

அளித்திட அரசு வேலை வாய்ப்பில் 26 சதவிகிதம் ஒதுக்கீடு செய்வதென்பது முடிவாகியிருக்கிறது இந்தத் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதுகின்ற பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பினைக் கிளப்பியுள்ளனர்.

இந்தப் பிரச்சினை ஒரு குழப்பத்தை உண்டாக்கியுள்ளது. அது தெளிவாக்கப்பட வேண்டிய ஒன்றேயாகும். ஏற்கனவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் மலைவாழ் மக்களுக்கும் பதினைந்து சதவிகிதமும், பத்து சதவிகிதமும் முறையே அரசு வேலை வாய்ப்பில் ஒதுக்கப்பட்டுள்ளது. பின் தங்கிய சமூகத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை: உண்மையில் இதுகுறைவே ஆகும் ஏனெனில் 1964-ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் தேவராசன் என்பவருக்கும், இந்திய அரசுக்கும் வேலைவாய்ப்பு ஒதுக்கீடு விஷயமாக வழக்கு ஒன்று நடந்தது. அந்தவழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு— ஒதுக்கீடு ஐம்பது சதவிகிதத்திற்கு மேற் செல்லக்கூடாது' என்பதாகும்.

இந்தச் சலுகைகளுக்குப் பின்னர் பீகாரில், ஒரு சூழ்நிலை உருவாகி உள்ளது. ஏற்கனவே பயன் அடைந்துவரும் தாழ்த்தப்பட்ட சமூகமும் தற்போது ஏற்படுத்தப்பட்ட சலுகைகளின் காரணமாக சஞ்சலத்துக்கு ஆளாகி உள்ளனராம். பெரும் எண்ணிக்கை உள்ள முஸ்லீம் சமுதாயம் பின்தங்கிய நிலையிலேயே இருப்பினும் பீகாரைப் பொறுத்தவரை இந்தச் சலுகைப் பட்டியலில் இடம் பெறவில்லை.

இந்நிலையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எதிராக உயர் சாதியினர் கிளம்பியிருக்கிறார்கள்.

இந்தப் போராட்ட உணர்வு நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் பரவுகின்றது.

பின்தங்கியசமூகங்களுக்கு வேலைவாய்ப்பு ஒதுக்கீடு கூடாது என்றும் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இல்லையெனில் பீகார் முழுதும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி அரசை ஸ்தம்பிக்கச் செய்வோம் என்று பீகார் மாநில சத்ரசங் சஞ்சலன் சமிதியைச் சேர்ந்த ஏழு தலைவர்கள் கூறியுள்ளனர். மாணவர் அமைப்பின் பிரதிநிதிகளும் இதில் தொடர்பு கொண்டுள்ளனர்.

இந்தக் கொந்தளிப்பு பீகார் அரசியலைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது அமைதியின்மை நிலவுகிறது. தொடர்ந்து நடைபெற வேண்டிய அரசுப்பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதற்குப் பரிகாரம்தான் என்ன என்று நாட்டின் முன்னேற்றத்தில் கவலை கொண்டுள்ள அரசியல் தலைவர்கள் சிந்திக்கிறார்கள்.

இந்திய நாட்டில் இன்று சாதிகளும் சமூகப் பிரிவுகளும் ஓர் ஆடையில் குறுக்கும், நெடுக்குமாக பின்னிப் பிணைந்து ஓடுகிற நூல் இழைகளைப் போல் ஒன்றை ஒன்று பிரிக்க இயலாத நிலையில் உள்ளன. இந்த உண்மைகளைப் புரிந்தோ, புரியாமலோ மேற்கத்திய தொழிலாளவர்க்கப் போராட்டத் தத்துவங்களை மேற்கொண்டனர்.

கம்யூனிஸ்ட்டுகளும் சோஷலிஸ்ட்களும் இந்தியாவில் உண்மை நிலைமைகளையும் புறக்கணித்து தொழிலாளவர்க்கப் போராட்டம் மட்டுமே நடத்

(12-ம பக்கம் பார்க்க)

## 'வலது'களின் காலங்கடந்த ஞானோதயம்!

வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் அகில இந்திய மாநாடு பஞ்சாபில் நடந்தது

"நெருக்கடி நிலையை வரவேற்று இந்திராவுக்கு 'வால்' பிடித்தது மிகப் பெருங் தவறு" என்பதை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளுவதாகத்தீர்மானம் ஒன்று அம்மாநாட்டில்நிறைவேற்றப் பட்டது.


இதன்மூலம், "நெருக்கடி நிலைக்கு 'வக்காலத்து; வாங்கியது சரியே' என்ற டாங்கேயின் கொள்கை மண் சவ்வியது. அதுமட்டுமல்ல; 'தவிர்க்க முடியாத காரணத்தால்தான் நெருக்கடி நிலைக்கு ஆதரவு தரவேண்டி வந்தது' என்ற சிலரின் 'சமாதானமும்' மாநாட்டில் நிராகரிக்கப்பட்டது.

மூன்று முக்கியமான திருத்தங்களை மாநாடு ஏற்றுக் கொண்டது முதலாவது திருத்தம், இந்திராவின் தேர்தல் செல்லாது என அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே, அவர் பதவியிலிருந்து விலக வேண்டுமென வலது கம்யூனிஸ்டுக் கட்சி வற்புறுத்தியிருக்கவேண்டும் இரண்டாவது திருத்தம் 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தைஎதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களித்திருக்கவேண்டும் (42 வது அரசியல் சட்டத்திருத்தம் என்பது இந்திரா என்ற தனி நபரைப் பாதுகாக்கச் செய்யப்பட்ட ஒரு திருத்தம் என்பதும், பிற எதிர்க் கட்சிகள் அத்திருத்தத்தை எதிர்த்தபோது வலது கம்யூனிஸ்டுக் கட்சி மட்டும் வரவேற்றது என்பதும் தெரிந்ததே) மூன்றாவது திருத்தம், வலதுசாரி சக்திகளை எதிர்த்துப் போராடச் சாலச் சிறந்த வழி, அரசியல் முறையே நிர்வாக முறையல்ல; அதாவது, இந்திராவின் நிர்வாகம் வலதுசாரிப் பிற்போக்குச் சக்திகளைத்தான் ஊக்குவித்தது என்பதுதான் இதன் பொருள்.

1969ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சி இரண்டாக உடைந்த நாளிலிருந்தே வலது கம்யூனிஸ்டுக் கட்சி தவறான அரசியல் கொள்கையைக் கடைபிடித்து வந்ததாக மேற்கு வங்கத்துப் பிரதிநிதிகள் மாநாட்டில் குற்றம் சாட்டினர்கள்.

இராஜேசுவர ராவ் மொகித் சென், இந்திரஜித் குப்தா— ஆகியோரின் (இவர்கள் அனைவரும் டாங்கேவோடு மாறுபட்ட கருத்துடையவர்கள்) 'கை'யே மாநாட்டில் ஓங்கியிருந்தது.

மீண்டும் அக்கட்சித் தலைவராக ஆகும் வாய்ப்பு எதிர் காலத்தில் டாங்கேவுக்குக் கிடாது எனக் கருதப்படுகிறது.



தேர்தல் நாள் 9-4-78

தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கான
சென்னை பட்டதாரிகள் தொகுதி
தி. மு. கழக ஆதரவு வேட்பாளர்
கணேசன் ஆர். என்கிற
மிசா. ஆர். கணேசன்
எம். ஏ., பி. எல்.
அவர்கட்கு உங்களது முதல் வாக்கினை
அளித்து வெற்றிபெறச்செய்யவேண்டுகிறோம்

உதயசூரியன் மோதிரம்



1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல்லாயிரக்கணக்கான இயக்க தோழர்களின் கரங்களில் களையாழியாக திகழ்ந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும், தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள் மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தயாரித்து வாழ்க கலைஞர்' என்று பொறித்து தருகிறோம். ஒரு மோதிரம் விலை ரூ. 15.00 தபால் செலவு 3.50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3/00 அட்வான்சுடன் அனுப்பினால் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600072

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் மோதிரத்தை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டோ வீனஸ்,
104, C. N. K. ரோட் - சென்னை-5.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

# பகுகுணுவைப் பாராட்டுகிறோம்!

தமிழ் மண்ணில் எழுதப்படாத கதைகள் ஏராளமுண்டு. ஆயிரக் கணக்கான விளக்கங்களைக் கூறி, ஆதாரங்களை எடுத்துக் காட்டி விவரிக்க முடியாத பெரிய பெரிய செய்திகளைக்கூட சின்னஞ் சிறிய எழுதப்படாத கதை ஒன்றினாலேயே விளக்கிவிட முடியும்.

மத்தியில் எத்தனையோ அரசுகள் வந்து விட்டன. என்றாலும் இந்தித் திணிப்பைப் பொறுத்தவரை 'அவருக்கு இவர் எழுந்திருந்து உட்கார்ந்தார்' என்னும் நகைச்சுவைப் பழமொழியைப்போல்தான் எல்லா அமைச்சரவைகளுமே உள்ளன.

தமிழினக் காவலர் கலைஞர் அவர்கள் சொன்னதைப்போல், நாடகத்தில் நடிகர்கள் தாம் மாறுகிறார்களே தவிர வசனங்கள் மாற வில்லை' என்பதுதான் உண்மை

இதை எண்ணிப் பார்க்கும்போதுதான் இந்தித் திணிப்பு நேருவின் காலத்தில் இருந்தது. இலால் பகதூர் காலத்தில் இருக்காது என்று நம்பினோம்- அவர் நேருவை நல்லவராக்கிவிட்டார். இந்திராவின் காலத்திலாவது இந்தித் திணிப்பு இல்லையெனும் காலம் வரும் என்று நம்பினோம்! உமியைக் கொடுத்து அரிசி கேட்ட கதையாகிவிட்டது!

சர்வாதிகாரம் ஆட்சி செலுத்த, ஜனநாயகம் சாகடிக்கப்படுமோ என்னும் கால கட்டத்தில் தடி யெடுத்தவரெல்லாம் தண்டல்காரராக தாய்மொழி என்பதே தகாத தொடர் என்று ஆக்கப்பட்டுவிட்டது.

இந்திரா, இந்தி, இந்தியா என்று முழங்கி முழங்கி தாய்மொழியின் மூச்சுக் குழல் இறுக்கமாக அழுத்தப்பட்டது.

தேசிய நீரோட்டம் என்னும் புதிய சொல் உருவாக்கப்பட்டு ஆகாதவரெல்லாம் அழிப்பதற்கு உசுப்பி விடப்பட்டது!

சர்வாதிகாரம் சாகுமா? ஜனநாயகம் பிழைக்குமா? என்று கால தேவனைக் கையெடுத்துக் கும்பிட்டனர் மக்கள்!

காலதேவன் கண்களைத் திறந்தான்; அவனுடைய அருட் பார்வை, அன்னை இந்திராவின் இரும்புப் பிடியில் இருந்து இந்நாட்டைக் காப்பாற்றியது!

ஜனதா உருவானது: ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது!

நாமெல்லாம் நம்பினோம்! இனியொரு கவலை இல்லை; இந்தித் திணிப்பு இருக்காது; இன்பத் தமிழ் காக்கப் பெறும் என்றெல்லாம் கனவு கண்டோம்!

கனவு, பகற்கனவாகப் போய் விட்டது. என்பதை, 'ஜன நாயகம் காத்த ஜனதா அரசு. எ ஹும் நினைவோடு சொல்ல வருத்தமாகத் தான் இருக்கிறது!

இந்திய ஜனநாயகத்தைக் காத்தவர்கள் இந்தி ஜனநாயகத்தைக் கொண்டு வந்து விடுவார்களோ என்று அஞ்சும் நம் உள்ளம்.

'நீயாகவே படித்துக்கொள்; நாங்கள் திணிக்கமாட்டோம் என்று நியாய வாதம் பேசுவதில் ஒரு வகையான நயம் இருக்கிறதே தவிர, இந்தியைப் பரப்புகிறார்களே என்று பயம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை!

'படித்தால் பதவி உயர்வு; படித்தால் ஊதிய உயர்வு; படித்தால்தான் வேலை என்று பயமுறுத்தாமல் சொல்லுவதும், 'படிக்காவிட்டால் ஒழிந்தாய் என்று மிரட்டுவதும் குரலில் மாற்றம் இருக்கலாமே தவிர, கொள்கையில் எந்தத் தடுமாற்றமும் இல்லை என்பதைச் சாதாரண அறிவு படைத்தவனுக்கேயே புரிந்து கொள்ள முடியும்.

'அதுதான் புற்றப்பா, அதில்தான் பாம்பப்பா, மெல்ல செல்லப்பா; மேலே நில்லப்பா என்று கொஞ்சிக் கொஞ்சி சொன்னாலும், குழைந்து குழைந்து சொன்னாலும், ஏமாந்தவனைப் பாம்பு கடித்தால் விஷம் ஏறுமலா இருக்கும்' அதைவிடப் பாம்பையே விட்டுக் கடிக்க வைத்தாலும் பழி இல்லையே.

மத்திய அரசின் இந்தித் திணிப்பு இப்படிப்பட்டதுதான் என்று சொல்ல வருத்தமாக இருந்தாலும் உண்மை இதுதானே!

மத்திய அரசின் ஆளும்பொறுப்பில் உள்ளவர்கள் அனைவருமே இப்படித்தானா என்று கேட்டால் 'நானில்லை...நானில்லை என்று நாணயமான குரல் ஒன்று இன்னும் நம் போன்றவர்களுக்கு நம்பிக்கையைத் தருகிறது.

அந்தக் குரலுக்கு உரிய குணாளர்தான் மத்திய எரி-இராசயன அமைச்சர் மாண்புமிகு பகுகுணா ஆவார்!

அவரைத் தமிழ் வார ஏடு ஒன்று அண்மையில் பேட்டி கண்டுள்ளது.

அந்தப் பேட்டியில், தென்னாட்டுக் கலையில் தமக்குள்ள அளவு கடந்த அன்பை வெளிப்படையாகக் கூறியுள்ளதைக் கண்டு வியந்து பாராட்டி மகிழ முடிகிறது நம்மால்

"திராவிடக் கலாச்சாரம் உலகத்திலேயே மிகவும் சிறந்தது"

இதுவும் பகுகுணா அவர்களின் மனந் திறந்த கருத்துதான்.

இன்னும் சொல்லுகிறார்!

"உண்மையில் இந்தியக் கலாசாரத்தைத் தென்னாடுதான் பேணிப் போற்றி வளர்த்து வந்திருக்கிறது; அது கலப்பட மில்லாத கலாச்சாரம். தென்னாட்டவர்கள் எளிமையின் உறைவிடம்" நமக்கே நாணமாக இருக்கிறது! உண்மைதானே நேருக்கு நேர் புகழ்ந்துரைக்கும்போது நல்லவர்களுக்கு நாணமாகத் தானே இருக்கும்!

அதற்கு மேலும் பாராட்டியிருக்கிறார். அதற்காகத் தகுதி வாய்ந்த பெருமகனார்க்குப் பணிவார்ந்த நன்றியைத் தமிழர்கள் செலுத்துவது கடமையாகும்.

பாராட்டிய பகுகுணா அவர்கள் நம் வயிற்றில் பாலை வார்க்கும் மற்றொரு கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள்:

'எவ்வளவோ முக்கியமான விஷயங்கள், ஆக்க வேலைகள் காத்துக்கொண்டிருக்கும் போது, இந்திக்கு என்ன அவசரம்? அதுதான் இந்தியாவின் தலையாய பிரச்சினையா?' என்று பேட்டி கண்டவர் கேட்டுள்ளார்

### தென்னகன்

அதற்கு அஞ்சாத அந்தச் சிங்கம் சொல்லியதைப் படித்தால் உடல், உள்ளம் சிலிர்க்கிறது என்பது மிகைபடக் கூறுவதாகாது.

"நீங்கள் சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை. இந்திக்கு இப்போது என்ன அவசரம்? சமீபத்தில் பத்திரிகைகளில் படித்திருப்பீர்களே. ஒரு மத்திய மந்திரி பெங்களூர் வரையில் போய் அங்கே 'மெனக் கெட்டு இந்தியில் பேசி இருக்கிறாரே. எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பது போல. இது அவசியந்தானா?

பெரியாரோ, பேரறிஞர் அண்ணாவோ மறைவதற்கு முன் மலர்ந்த கருத்துக்கள் அல்ல இவைகள்! இந்தித் திணிப்பை எதிர்த்து, 'ஓடி வந்த இந்திப் பெண்ணே! கேள்! நீ நாடி வந்த நாடு இதல்லவே' என்று பிஞ்சுப் பருவத்திலிருந்தே வீரப் பண்பாடி வரும் வெற்றித் திருமகன் கலைஞர் முழக்கமல்ல இவை!

மத்திய அமைச்சர் அதுவும் ஜனதாக் கட்சியில் சர்வவல்லமை படைத்த மாமனிதர் கூறுகிறார் இப்படி!

'இந்திக்கு இப்போது என்ன அவசரம்' என்கிறார் பகுகுணா!

'எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது ஏன்' என்கிறார் பகுகுணா'

'இது அவசியந்தானா ?' என்கிறார் மத்திய அமைச்சர் பகுகுணா'

மத்திய அமைச்சரே மனம் நொந்து கேட்கிறார் என்றால் இந்தித் திணிப்பு அந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதுதானே உண்மை

இங்கிருக்கும் மேதைகள் 'இந்திக்காக நாங்கள் இருக்கிறோம்' என்று அண்ணாயிசம் பேசிபதைக் கேட்டவர்கள் பகுகுணாவின பாய்ச்சலை நம்பமாட்டார்கள்தான்.

ஆபத்து வருமோ என்று அஞ்சி 'அகில இந்தியாக்கள்' ஆனவர்களையும் நினைத்துப் பாருங்கள்; பகுகுணா போன்ற உண்மையான பரந்த நோக்கம் கொண்டவர்களையும் எண்ணிப் பாருங்கள்!

மருந்தைக் குடிக்கும் போது குரங்கை நினைத்ததை மன்னித்து விடுங்கள்!

என்ன செய்வது:- கட்டபொம்மனுக்கு இடம் கொடுக்கும் வரலாறு எட்டப்பனை எட்டிப்பா உதைக்கிறது.

பகுகுணா போன்ற பாராட்டுக்குரிய நேர்மையாளர்களை நினைக்கும்போது, அண்ணாயிச அகில இந்தியாக்களின் நினைவு வரத்தான் செய்கிறது.

பேட்டியின் மகுடமணியாக மாண்புமிகு பகுகுணா அவர்கள் மேலும் ஒன்றினைக் கூறியுள்ளார்கள்;

"நான் சொல்வதை அப்படியே எழுதிக் கொள்ளுங்கள்"

தான் நினைக்கும் கருத்து தவறாக வெளி வரக் கூடாது என்னும் எச்சரிக்கையினைத் தெளிவாக்கியுள்ளார் மத்திய அமைச்சர்.

ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் 'அப்படியே எழுதிக் கொள்ளுங்கள்' என்பது நம் நாடு அறிந்த செய்தி.

ஆனால், பகுகுணா அவர்கள் இப்படிச் சொல்வதற்குக் காரணம், தன் கருத்தின் அழுத்தம் குறைந்து விடக் கூடாது என்பதுதான்.

இந்த நூற்றாண்டிலும் இப்படியும் சில மறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!

அவர் கூறுகிறார்; 'இந்த மொழிப் பிரச்சினையால் இந்தியாவின் ஒற்றுமை சீர்குலையுமானால், இந்தி மொழியையே குழிவெட்டிப் புதைத்து விடலாம்.'

இப்படியா சொன்னார் என்று எவரும் வியப்படைய வேண்டாம்!

இப்படித்தான் சொல்லியுள்ளார்; மத்திய அமைச்சர் மாண்புமிகு பகுகுணா அவர்கள் இப்படித்தான் சொல்லியுள்ளார்-

நான் சொல்வதை அப்படியே எழுதிக் கொள்ளுங்கள்' என்று தன் அஞ்சாத பண்பை முன்னால் நிறுத்திய பிறகே குழி வெட்டிப் புதைத்து விடலாம்' என்று கூறியுள்ளார்.

பெரியார் வழி அண்ணா நெறி என்று சென்னையில் முழங்கி விட்டு, 'இந்திக்கு நாங்கள் இருக்கிறோம். துணை' என்று தில்லிப் பட்டினத்தில் மண்டியிடும் 'மனங்களைக் கண்டவர்கள் அந்த வீர வரிகளையும் ஒருமுறை மனதில் நிறுத்திப் பார்க்க வேண்டும்.

இந்தித் திணிப்பை எதிர்ப்பது தேசிய நீரோட்டத்தில் தமிழகம் கலந்து கொள்ளாமல் தடுப்பது என்று உளறிக் கொட்டும் ஊமைகள். தங்கள் ஆமை மனத்தின் அடிமை உணர்ச்சியை இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்!

பாலைவனத்தில் பசுஞ்சோலையாகக் காட்சி தரும் பகுகுணா அவர்கள், 'இந்தித் திணிப்பிற்காக இந்தியா பலியிடப்படுவதைவிட, இந்திய ஒற்றுமைக்காக இந்தித் திணிப்பு பலியிடப்படலாம், அதாவது விலக்கி வைக்கப்படலாம் என்று வெளியிட்டுள்ள கருத்து தூய்மையான ஒரு இதயத்தின் உண்மையான துடிப்பு என்பதைத் தொடர்புள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதுதான்—அதுவும் ஒரு தாய்மொழி என்ற அளவில் இந்திக்கும் நல்லது.

அதனால், இந்தியாவுக்கும் நல்லது! சொல்ல வேண்டிய இடத்திலிருந்து சொல்ல வேண்டிய கருத்தை, ஆனால், பலர் சொல்வதற்கு அஞ்சக் கூடிய கருத்தினைத் துணிவோடு சொல்லியுள்ள மாண்புமிகு பகுகுணா அவர்களை மகிழ்வோடு பாராட்டுகிறோம்! அதே நேரத்தில், நேரம் வரும்போது தமது உணர்வுக்குத் துணையாக நிற்கத் தயங்கிடக் கூடாது என்றும் பணிவோடு வேண்டுகிறோம்!

# 300-ஆண்டுகளுக்குப் பிறகு தூக்கிலேறியவனின் கதை

முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாண்டு ஜனவரி திங்கள் முதன் முறையாக மீண்டும் ஒரு இளைஞன் கோவாவில் தூக்கிலிடப்பட்டான் என்ற செய்தி ஏற்கனவே வெளிவந்திருக்கிறது.

கோவாவைப் போர்த்துகீசியர்கள் ஆண்ட காலத்தில் கொலைக்குற்றம் வெகு அபூர்வமாகவே நடந்தது-பத்தாண்டுகளுக்கு ஒருமுறை அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற அளவில்.

இப்போதோ மாதம் ஒரு கொலைக் குற்றம் நடந்து கோவாவை உலுக்கிக்கொண்டிருக்கிறது.

நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு தூக்கு மரத்தின் நிழலில் மரணத்தைத் தழுவிய ஜோசப் டேவிட் பீட்டர் என்ற பெருடைய அவன், குமார் என்று அழைக்கப்பட்டு வந்தான். அவன் போக்கிய உயிர் ஒன்றல்ல, இரண்டு...... இன்னும் சொல்லப்போனால் மூன்று......!

சேவியர் லாரன்ஸ் என்பவரின் மனைவி, டொராத்தி. முப்பதே வயதான அவள் கரேன் என்ற மூன்று வயதுச் சிறுமியின் அன்னையுங்கூட; இன்னும் நான்கு மாதங்கள் போனால், மற்றுமொரு குழந்தைக்கும் அவள் அன்னையாகி விடுவாள்...அவள் வயிற்றில் ஆறு மாதக் கரு வளர்ந்து கொண்டிருந்தது—

லாரன்ஸ்தான் குமாரைத் தன் வீட்டு வேலைக்காரனாக வைத்துக்கொண்டார்; தம்முடைய ஆசை மனைவி, அருமை மகள் ஆகியோரின் உயிருக்கு எமனாக குமார் மாறுவான் என்று—பாவம், லாரன்சுக்கு எப்படித் தெரியும்?

வியாபாரத் தொடர்பாக வெளியூர் போய்விட்டு வீடு திரும்பிய லாரன்ஸ், பிணவாடை வீசுவதை உணர்ந்து திடுக்கிட்டார்; ஓடோடி வந்து வரவேற்கும் மனைவியும், பாசத்தோடு கால்களைச் சுற்றிக் கொள்ளும் மகளும் வழக்கம்போல் வராதது கண்டு அவருடைய அச்சம் அதிகரித்தது. வீடு முழுக்க அலசினர்... அவர்களைக் காணவில்லை...... எங்கே அவர்கள்? வெளியே எங்கேயாவது போயிருப்பார்களோ?

ஆனால், இந்தப் பிணவாடை எங்கிருந்து வீசுகிறது?

மறுபடியும், மறுபடியும் அலசினர்.....

பழைய வரவு—செலவு கணக்குப் புத்தகங்களை வைக்கும் மரப்பெட்டியை நெருங்கியபோது பிணவாடை அதிகரித்தது; மூக்கைக் கரத்தால் மூடிக்கொண்டு, நெஞ்சம் படபடக்க அதைத் திறந்து பார்த்தபோது—

—இதயம் ஓட்டம் சில விநாடிகள் நின்றது......அந்தப் பகலை இருண்டு, அவருடைய தலை சுற்றியது; கண்கள் இமைப்பதை மறந்து வெறித்தபடி நோக்கின.

—அவருடைய இன்பதுன்பங்களில் பங்கேற்ற மனைவியும், எதிர்காலக் கனவுகளைச் சுமந்திருந்த மகளும் உள்ளே கொலை செய்யப்பட்டுப் பிணமாகக் கிடந்தனர். வேலைக்காரன்—அந்தக் குமார் எங்கே போனான்? இந்தக் கொலை பாதகத்தைச் செய்த கல்நெஞ்சன் யார்?

**சித்தார்த்தன்**

* * *

குமார் பம்பாய்த் தெருக்களில் குறிக்கோளற்று அலைந்த பிறகு பெங்களூர் வந்து சேர்ந்தான். கடற்படையில் வேலை பார்க்கும் ஒரு அதிகாரி என்று சொல்லிக் கொண்ட அவன், அங்கே ஒரு இளம் பெண்ணின்மீது காதல் வலை வீசி, அவளோடு சில நாட்கள் திரிந்தான் இருந்த பணமெல்லாம் தீர்ந்துவிட்டது.

பணத்திற்காகத்தான் கர்ப்பிணியான டொராத்தியையும் அவளுடைய மகளையும் அவன் கொன்றான். அந்தக் கொலைகள் செய்து அவன் கொள்ளையடித்த பணம் எவ்வளவு தெரியுமா? அறுநூறு ரூபாய். ஆம்; வெறும் அறுநூறு ரூபாய்க்காக இரண்டு உயிர்களைக் காவு கொண்டுவிட்டான்.

தடயங்கள் காட்டிக் கொடுத்துவிடவே, கொலைகாரன் குமார்தான் என்றறிந்த கோவா காவல்துறையினர் அவனைத் தேடிப் பிடித்துக் கைது செய்து கோவாவுக்கு இழுத்து வந்தனர்.

டொராத்தி அழகும் இனிமையும் ஒரு சேரப்பெற்ற இரக்க மனமுடைய ஒரு நல்ல பெண்; அவள் ஈன்றெடுத்த சிறுமி கரேன் ஒரு பொம்மை போல் அவ்வளவு அழகாய் இருப்பாள்; அவர்களுக்கேற்பட்ட கொடுஞ்சாவைக் கேள்விப்பட்ட மக்கள் அழுகையோடும், ஆத்திரத்தோடும் மண்ணைவாரித் தூற்றினார்கள்: "படுபாவிகள் நாசமாய்ப் போக...!" என்று.

"அந்தக் கொலைகளைச் செய்தது நானல்ல" என்று குமார் வழக்காடினான். அவனுக்கு 'வக்காலத்து' வாங்கி வழக்காடிய வழக்குரைஞருக்கு, வழக்கு நடந்து கொண்டிருந்தபோதே பக்கவாதம் வந்துவிட்டது.

உச்ச நீதிமன்றம் (Supreme Court) வரை போய்ப் பார்த்தான் குமார்; ஒன்றும் நடக்கவில்லை. அவன்தான் கொலைகாரன் என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் மெய்ப்பிக்கப்பட்டு விட்டதால், உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண (அய்யர்) அவனுடைய மனுவைத் தள்ளுபடி செய்தார்.

ஆறு ஆண்டுகள் 'வாழ்வா, சாவா?' என்ற கேள்விகளுக்ிடையே இருண்ட சிறைச்சாலையின் தனித்த அறையில் குமாரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இறுதியில் விடை கிடைத்துவிட்டது—நிச்சயமாகச் சாவுதான்!

அவனுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. மேல் விண்ணப்பங்கள், கருணை மனுக்கள் எல்லாமே நிராகரிக்கப்பட்டன; அவன்மீது இரக்கம் காட்டும்படி கோவாவின் கிறித்துவ மதத் தலைவரான (பிஷப்) ரால் கான்சல்வீஸ் விடுத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

குமாருக்குத் தூக்குத் தண்டனை உறுதியாகிவிட்டது—ஆனால், அவனை எங்கே வைத்துத் தூக்கிலிடுவது?

1867ஆம் ஆண்டில் கோவாவில் போர்த்துகீசியர்களால் தூக்கு தண்டனை நீக்கப்பட்டது. இப்போது குமாரைத் தூக்கிலிட 'தூக்குமேடை' எங்கும் இல்லை.

கோவா அரசு பிறமாநிலங்களைப்பார்த்து, 'குமாருக்குவிதிக்கப்பட்ட தூக்குதண்டனையை உங்கள் மாநிலத்தில் நிறைவேற்றிக் கொள்ள அனுமதியுங்கள்" என்று கோரிக்கை விடுத்தது. எந்த மாநிலமும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

வேறு வழியின்றி சட்டத்தை நிலைநாட்ட — அதாவது குமாரைத் தூக்கிலிட— அரசு புதிதாக ஒரு 'தூக்கு மேடை' அமைக்க ஏற்பாடு செய்தது. மோகன்தாஸ் காமத் என்ற இளைஞரும், விளையாட்டுகளில் ஆர்வமும் கொண்ட ஒரு பொறியியல் வல்லுநரை, 'தூக்குமேடை' அமைக்கும் பணிக்கு அரசு நியமித்தது. அந்தப் பணியை திருப்தியாக செய்து முடித்த மோகன்தாஸ்—ஏனோ தெரியவில்லை, பிறகு வேலையிலிருந்து தானாகவே விலகிக் கொண்டார்.

இருநூற்று நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்களை—கொலைக்குற்றம்செய்தவர்களை—தூக்கிலிட்ட ஒருவரைஅரசு தேடிப் பிடித்தது — குமாரையும் தூக்கிலிட! தூக்கிலிடும் வேலை செய்யும் அந்த மனிதரின் சம்பளம் — தலைக்கு முப்பது ரூபாய், ஒரு பாட்டில் சாராயம்!

ஒரு கொலைகாரனைத் தூக்கிலிடுவதற்கு முன் அவன் விரும்பும் உணவுண்ண அனுமதிக்கப்படுவது வழக்கம்; "உனக்கு என்ன வேண்டும்?" என்று குமாரிடம் கேட்கப்பட்டபோது, சிறிது பாலும் கொஞ்சம் ரொட்டியும் கேட்டான் அவன்.

ரொட்டியைச் சிறு சிறு துண்டுகளாக்கி அவைகளைப் பாலில் தோய்த்துச் சுவைத்துச் சாப்பிட்டான் அவன். பிறகு, ஒரு பாதிரியாரை வரவழைத்துப் 'பாவமன்னிப்பு' கேட்டுக் கொண்டான்; இறந்த பிறகு தன் உடலை மருத்துவத் துறைக்குப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி தந்தான்; தன்னை ஈன்ற தாயாரைப் பார்க்க ஆசையாக இருக்கிறது என்றான். அவளுக்குச் செய்தி அனுப்பப்பட்டது; ஆனால், அவள் வரவில்லை. 'ஈன்ற பொழுதிற் பெரிதுவந்த' அந்தத் தாய் கொலைகாரனாகிவிட்ட — கீழ்மைத்தனம் கொண்ட — மகனைப் பார்க்க விரும்பவில்லையோ என்னவோ!

கடைசியாகத் தன்னுடைய சிறைத் தோழர்களிடையே ஒரு 'சொற்பொழிவு' நடத்த அனுமதி கோரினான். அதிகாரிகள் முதலில் மறுத்தபோதும் பிறகு சில நிமிட நேர அனுமதி வழங்கினார்கள்.

அவன் தன் சிறைத் தோழர்களுக்குச் செய்த உபதேசமாவது, "நான்தான் குமார் பேசுகிறேன்...பெருந்தீங்கிழைத்த குமார் பேசுகிறேன்...இரண்டு உயிர்களை—அயலாளர்களான இருவரின் உயிர்களைக் காவு கொண்ட குமார் பேசுகிறேன்; சிறையில் வாடுவது குறித்து நீங்கள் குறை சொல்லாதீர்கள்; புகார்கள் விடுக்காதீர்கள்; செய்த குற்றங்களுக்குத் தண்டனை ஏற்று அதற்காகத் துன்புறவே நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்; திருடாதீர்கள்! பொய் சொல்லாதீர்கள்! நம்பியவர்களின் கழுத்தறுக்காதீர்கள்! வாக்குவாதம் செய்யாதீர்கள்! இவ்வுலகம் தீமை

(10-ம் பக்கம் பார்க்க)

## மூடநம்பிக்கைக்குப் பலியான உயிர்!

மணியன் என்பவரின் ஏழுமாத ஆண் குழந்தை ஷிபு. அவரும், அவருடைய மனைவியும் தங்கள் மழலைச் செல்வத்தின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும், அவன் செல்வாக்கோடு வாழவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அவர்கள் ஆசைப்பட்டதில் தவறில்லைதான். ஆனால், அதற்காக செய்த செயல் இருக்கிறதே,,..?

குழந்தைக்கு இருக்கும் ஏதோ ஒரு 'தோஷம்' அகலவும், அது அச்சமற்றதாக வளரவும் வேண்டுமானால் குழந்தையின் முகத்தை யானை நக்க வேண்டும் என யாரோ சொல்ல அதை அப்படியே நம்பினார்கள் குழந்தையின் பெற்றோர்கள்.

கிராமத்தில் நடந்த விழா ஒன்றின்போது யானை வந்தது. தங்கள் குழந்தையை அந்தப் பெற்றோர்கள் யானையின் முன்னும், பின்னும் கொண்டு சென்றார்கள். பிறகு, மாவுத்தன் குழந்தையை ஏந்தி யானையின் வாயை நோக்கி உயர்த்தினான்.

தென்னங்கீற்றுகளைத் தின்று கொண்டிருந்த யானை, குழந்தையின் தலையையும் கவ்வவே — குழந்தை அங்கேயே, அக்கணமே மாண்டது.

ஒரு சின்னஞ்சிறு உயிர், மூடநம்பிக்கைக்கு இவ்வாறு பலியானது — திருவனந்தபுரத்திற்கு அருகேயிருக்கும் ஒரு கிராமத்தில்.

# எட்டுத்திக்கிலும்..!

## கறுப்பர் தலைவர் கொலை!

தென்மேற்கு ஆப்ரிக்காவின் (நமிபியா) 'ஜனநாயக டர்ன்ஹால் கூட்டணிக் கட்சி'யின் தலைவர், 'கிளெமென்ஸ் காபூவோ.

ஹீரேரோ என்ற பழங்குடி மக்களின் தலைவரான அவர், நமிபியாவின் அடுத்த குடியரசுத் தலைவர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்டவர், ஐம்பத்தைந்து வயதான அவர், நமிபியாவின் தலைநகரான விண்டோக்கில், தென் ஆப்ரிக்காவின் ஆதிக்கத்திலிருக்கும் 'கடுமா' பகுதியில் கடை வைத்திருந்தார்.

கடந்த மாதம் தம்முடைய கடைக்குப் போய்க்கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் அவர் அவருக்கு முன் இருந்த ஜனநாயகக் கட்சித் தலைவரும் இரண்டு மாதங்களுக்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலைகாரர் யார் என்று இன்னும் தெரியவில்லை.

## ஈருடல்-ஓரிதயம்!

ஒஹியோவிலிருக்கும் யாங்ஸ்டவுனில் வாழும் ஒரு தம்பதியர்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன-ஒன்றோடொன்று ஒட்டியபடி. இவ்விரு குழந்தைகளுக்கும் ஒரு இதயம்தான் உள்ளது.

இதயத்தில் எல்லோருக்கும் நான்கு அறைகள் (Chambers) இருக்கும். ஆனால் இந்தஇரட்டைகுழந்தைகட்கு இருக்கும் ஒரே இதயத்தில் மூன்றே அறைகள்தான் உள்ளன.

அறுவைச் சிகிச்சை செய்து குழந்தைகளைப் பிரித்தால் ஒரு குழந்தை இறக்க நேரிடும் என்று மருத்துவர்கள் கருதுகிறார்கள்;

## காந்தீயச் சகோதரிக்கு உலக விருது

'மேடலீன் சிலேட்-பிரிட்டிஷ் பெற்றோரின் மகள். மகாத்மா காந்தியின் வாழ்க்கை-அவருடைய பணிகளை விவரித்து 'ரோமன் ரோலண்ட் என்ற பிரபல எழுத்தாளர் எழுதிய புத்தகங்களைப் படித்த பிறகு அம்மாது காந்தீய வாதியாக மாறிவிட்டார். பிறகு இந்தியாவுக்கு வந்து கிராமங்களின் முன்னேற்றத்திற்காகக் காந்தியோடுசேர்ந்து இடைவிடாதும் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமலும் பணியாற்றினர்.

இந்திய மக்களுக்கு அந்த அம்மையார் ஆற்றிய பணிகளுக்காக 'அனைத்துலகப் பெண்களுக்கான விருது கிடைத்துள்ளது. வியன்னாவிலிருக்கும் இந்தியத் தூதரான அமிரிக்; எஸ். மேதா அவ்விருதை அம்மையாருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

இப்போது ஆஸ்திரேலியாவில் வாழும் அந்த அம்மையாரான மேடலீன் சிலேட் வேறு யாருமல்ல — இந்தியர்களால் 'மீராபென்' என அன்போடு அழைக்கப்படுபவர்தான் அவர்.

## பொதுமக்கள் முன்னிலையில் கசையடிகள்!

கற்பழிப்பு போன்ற கீழ்மைத்தனமான குற்றமிழைக்கும் கயவர்களுக்குப் பாகிஸ்தானில் இப்போது பொது மக்கள்முன் கசையடிகள் கொடுக்கப்படுகின்றன.

சிறுமி ஒருத்தியைக்கெடுக்க முயன்ற முகமதுஷா என்பவருக்கு ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது; அத்தோடு பொதுமக்கள்முன் பதினைந்து கசையடிகளும் அவருக்குத் தரப்பட்டன.

அதேபோல் —

ஒரு சிறுவனைக் கொலை செய்த குற்றத்திற்காக மூன்று நபர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்க லாகூரில் அம்மூவரும் இராணுவத்தினரால் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

## மரண விளிம்பில் 'தேன் நிலவு'

"இறுதியாக நீ எதை உண்ண விரும்புகிறாய்?"

— தூக்கிலிடுவதற்குமுன் கொலைகாரனைப் பார்த்து



இந்தியச் சிறைகளில் கேட்கப்படும் கேள்வி இது.

'இறுதியாக யாரையாவது நீ மணக்க விரும்புகிறாயா?' — தூக்கிலிடுவதற்குமுன் கொலைகாரனைப் பார்த்துக் கேட்கப்படும் கேள்விதான் இதுவும் – ஆனால் இங்கல்ல— அமெரிக்காவில்.

அப்படி அவன் யாரையாவது மணந்து கொண்டால் நாற்பத்தெட்டு மணி நேரங்கள் வாழ — 'தேன்நிலவு' அனுபவிக்க — அனுமதிக்கப்படுகிறான்.

## திரையுலகத் தம்பதிகள்மீது வழக்கு!

சோபியாலாரன் — அனைத்துலகத்திரைப்படரசிகர்களின் கனவுக்கன்னி; கவர்ச்சி காட்டி மட்டுமல்ல. உணர்ச்சிகளைக் கொட்டியும் தன்னால் நடிக்க இயலும் என்பதை டூ உமன் (இரண்டு பெண்கள்) — சன்ஃபிளவர் (சூரியகாந்திப்பூ) போன்ற படங்கள் மூலம் மெய்ப்பித்தவர்.

அந்த நடிகையின் கணவரான 'கார்லோ போன்டி' — பிரம்மாண்டமானபடங்களைத் தயாரிப்பவர்.

நடிகை—இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். அவர் கணவர்—ஆங்கிலேயர். இருவருக்கும் இத்தாலியில் கோடிக் கணக்கான மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கின்றன என்றாலும் இருவரும் தங்கியிருப்பது பிரான்சு நாட்டுத் தலைநகரான பாரீசில்தான்.

"இத்தாலியில் இருக்கும் சொத்துக்களை எல்லாம்விற்று அப்பணத்தை வெளிநாட்டுக்குக் கடத்திச் செல்ல முயன்றார்கள்' என இத்தாலிய அரசாங்கம் இருவர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறது. அவர்களைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி பிரான்சை கேட்டுக் கொண்டுள்ளது.

## இயான் சுமித் வெளியேறுவாரா ?

ரொடீசியா — ஆப்ரிக்க இனத்தவர்கள் பெரும்பான்மையாக உள்ள நாடு அங்கே இயான் சுமித்தின் தலைமையிலான சிறுபான்மை அரசு நீண்டகாலமாக ஆட்சி செலுத்தி இன ஒதுக்கலைத் தீவிரமாகக் கடைபிடித்து வருகிறது.

இயான் சுமித்தின் கொடுங்கோன்மையான அடக்கு முறைகளுக்குப் பணியாது வீரம்செறிந்த அந்தக் கறுப்பு நிற ஆப்ரிக்க மக்கள் இடைவிடாது போரிட்டு வருகிறார்கள் 'கறுப்பர் நாட்டைக் கறுப்பரே ஆள வேண்டும்' என்பதே அவர்களது விடுதலை முழக்கம்.

சோவியத் கியூபா. பிரிட்டன். அமெரிக்கா—போன்ற நாடுகள் ரொடீசியாவைவிட்டு இயான் சுமித் வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன.

இதற்கிடையே ரொடீசிப் பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்த அமெரிக்க அதிபர் கார்ட்டர் ஒரு மாநாடு கூட்ட இருக்கிறார் அம் மாநாட்டில் வல்லரசுகள் மட்டுமல்லாது ரொடீசியாவைச் சுற்றியிருக்கும் அங்கோலா, ஜாம்பியா டான்ஜானியா, போட்ஸ் மொஸாம்பிக் போன்ற ஆப்ரிக்க நாடுகளும் கலந்துகொள்கின்றன.

ஏப்ரல் இருபத்து நான்காம் தேதியிலிருந்து மே முப்பது வரை நடக்கும் இம் மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் வாஜ்பாயும் கலந்து கொள்வார்.

அமைதி நிலவ வேண்டுமானால்—ரொடீசியாவை ஆப்ரிக்கர்களேதான் ஆள வேண்டுமென அதிபர் கார்ட்டர் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

## 'குரங்கு 'மனம் கொண்ட மனிதன்!

இலண்டனில் உள்ள மியூசியம் உலகப் புகழ்பெற்றது கடந்தகால சரித்திர நாயகர்கள், நாயகிகள், அறிஞர்கள் எழுத்தாளர்கள், கவிஞர்கள் பயன்படுத்திய பொருட்களையும், அவர்தம் படைப்புக்களையும் அங்கு பார்வையிட்டு மகிழலாம்.

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எண்பதாயிரம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஒரு ஓவியம் அங்குள்ளது இப்போது அதனுடைய விலை எண்பது இலட்சம்.

அழகுமிகு அந்த ஓவியத்தை 'மியூசியத்தை'ப் பார்க்க வந்த ஒருவன் வேண்டுமென்றே கிழித்துவிட்டான்.

கிழிந்த ஓவியத்தை மறுபடியும் ஒட்டி சரி செய்துவிடலாம் என அதிகாரிகள் சொன்னாலும்–அந்தப் பழைய அழகு அப்படியேயிருக்குமா ?

# மதிப்புரை

## நெஞ்சத்தில் அண்ணா

[பாத்தொகுப்பு]

தொகுப்பாசிரியர்கள்;

புலவர் பொன்னியின் செல்வன்
பாவலர் மெய்யடியான்

ஏனிந்த மணிநருக்கித்தனை புகழெனக் கண் வைத்தே காலதேவன், அண்ணாவின் உயிரைக் கவர்ந்து சென்ற போதும்—ஞாலமுள்ளவரை தமிழர்தம் உள்ளத்திலும் உணர்விலும் இரண்டறக் கலந்திருப்பார் அப்பேரறிஞர் என்பதை — இலக்கிய மணம் கமழும் கவிதை மலர்களால் கோக்கப்பட்ட இப் பாத்தொகுப்புஉணர்த்துகிறது

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதற்கொண்டு வளரும் கவிஞர் பொன்னியின் செல்வன் வரை எண்பத்து மூன்று கவிஞர்களின் பாக்கள் அடங்கிய இத்தொகுப்பு அண்ணாவின் ஆற்றல்—அறிவு — அரும்பணி அனைத்தையும் மீண்டும் நம்மை நினைவு கூரச் செய்கின்றன—அதே சமயம், அண்ணாவின் மறைவால் ஏற்பட்டுவிட்ட ஈடு செய்ய முடியாத இழப்பையும் தமிழர் வாழ்வில் கவிழ்ந்துவிட்டவெறுமையையும் உணர்த்திக் கண்கலங்கச் செய்கின்றன.

இப்பாக்களைத் தொகுத்து வெளியிட்ட புலவர் பொன்னியின் செல்வன், பாவலர் மெய்யடியான் ஆகியோரின் அரும் பணி பாராட்டுதற்குரியது.

உணர்ச்சியோட்டத்தோடும், உவமை நயத்தோடும் அழகு தமிழில் ஆக்கப்பட்ட பாக்கள் கொண்ட இத்தொகுப்பு அனைவரும் படித்துப் பயன் பெறத் தக்கது.

விலை ரூ. 4

வெளியீடு; பாவலர் மன்றம்
திருவையாறு
தஞ்சை மாவட்டம்

ஃ ஃ ஃ

பாவலர்
தென்மொழித் தமிழமல்லன்
எழுதிய

## பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு

விலை: 60 காசு

பாவேந்தர் பாரதிதாசனார் தொடாத துறையில்லை. அவற்றில் அவர் ஊட்டியுள்ள தமிழுணர்வுக் கருத்துக்களை எளிய இனிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுச்சி ஓவியமாக இந்நூலைத் தீட்டியுள்ளார் ஆசிரியர்.

பாவேந்தர் ஒருவர்தாம் தமிழ் உயிருக்கு நேர் என்றும் உயிரைவிடச் சிறந்தது என்றும் உயிரைக் கொடுத்தேனும் தமிழைக் காக்க வேண்டும் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார் என்பதைத் தமிழமல்லன் அவர்கள் செப்பமாக செம்மாந்த நடையில் நிலைநாட்டியுள்ளார்.

'உயர் தமிழை உயிர்க்கு நேர் என்று பாவேந்தர் கூறியிருப்பதன் சிறப்பையும், கரணியத்தையும் விளக்கியுள்ள முறை வியந்து பாராட்டுதற்குரியதாகும்.

மொழிப்போர் வீரர்தம் கைகளில் இருக்கவேண்டிய கூர்வாள் இந்நூலாகும்.

நாடு இந்நூலைக் கற்று நற்பயன் பெறுமாக.

வெளியீடு: பொ. கண்ணையன்
168 மாரியம்மன்கோயில்தெரு,
தட்டாஞ்சாவடி.
புதுச்சேரி—602000

ஃ ஃ ஃ

புலவர்
செந்தமிழ்ச் செழியன் எழுதிய

## இடிமுழக்கம்— பாதையும் பயணமும்

பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பே இவ்விரு நூல்களும்.

இடி முழக்கம் [விலை ரூ 2]

இசைப் பாடல்கள், சந்தப் பாக்கள், மரபுக் கவிதைகள் இந்நூலை அணி செய்கின்றன.

இடி முழக்கம் என்னும் தலைப்பில் உள்ள அறுபத்தெட்டு விருத்தங்களும் நெருப்புப் பாடல்கள். அச்சேற்றிய தாள்கள் பற்றி எரியாமல் இருப்பது வியப்பே!

"இன்னுயிரும் இன்னென்றே இறைவா வேண்டும்; இசைந்தளித்தால் இன் தமிழுக் கழிப்பேன் மீண்டும்

'நடிகனுக்கு மன்றம் வைக்கும் நாடே! — தமிழ் நாயகிக்கும் மன்றம் வைக்க நாடே''

"மு.க. என்ற முருகலைஞன், மொழி முன்னேற்றம் காண் போர்க்கு என்றுமே தலைவன்''

என்பன போன்ற எழுச்சி வரிகள் நூலெல்லாம் மணக்கின்றன

பாதையும்பயணமும்விலைரூ 2.50

மின்னல், எல் ஐ. சிக்கு இரக்கம், காமராசர் போன்ற தலைப்புக்களில் புதுமைக் கற்பனையோடு போட்டியிடுகிறது.

மரபுக் கவிதையெனும் மலர்ச் சோலைக்கு இடையில் வ. உ. சி. பற்றிய புதுக் கவிதைக் கிறுக்கல் தேவைதானா என்று கவிஞர் எண்ணிப் பார்ப்பாராக.


கண்ணியமான வகையில் கருத்துக்களை விளக்கும் கவிதைகளைக் கவிஞர் எதிர்காலத்தில் படைப்பாராக!

பயனுள்ள இரு நூல்களும்

கிடைக்குமிடம்:
18, முனியப்பன்நாயக்கன்தெரு
பெரம்பூர், சென்னை — 11

# தாய்மை

## கருணாநிதி



“சரசத்தாலும் சாகசத்தாலும் எப்படியோ அரசியின் மீது அரசனுக்கு இருந்த அன்பை அழித்துவிட்டேன். அரசனது இருதயத்திலே அழியாத சித்திரமாக அமர்ந்திருந்தாள் அந்தக் கோப்பெருந்தேவி! அந்தக் கலையாத ஓவியத்தைக் கரி கொண்டு மெழுகி விட்டேன்.

“மன்னரின் மன மாளிகையில் ஜோதி விளக்கு அவள், ஒரு காலத்தில்! அந்த ஜோதி விளக்கு இன்று வீதியிலே வீசப்பட்டு விட்டது. தோழிகள் புடை சூழ — தோகை மயில்கள் ஆடும் நந்தவனத்தில் மலரால் நடைபாதை அமைத்து அவளும் அரசரும் ஆனந்த பவனிகள் நடத்தினரே—அது அந்தக் காலம்.

“இப்போது வேந்தரின் இருதயத்தில் இந்தச் சுழற்கண்ணியின் சுந்தர ரூபம் பூஜை அறைப் படம் போல ஜோடித்து வைக்கப் பட்டிருக்கிறது. வேந்தரின் மடியும் மலைத்தோளும் அவளுக்குச் சொந்தம் ஒரு காலத்தில்! இன்றோ என் சொல்லுக்குச் சுழலும், ‘மாயப் பதுமை’யாகிவிட்டார், மணிமுடி வீரர்!

இது எனக்கு வெற்றிதான்—ஆனாலும் என் மனம் அமைதியடையவில்லை. அரசரின் பாசத்தையும் நேசத்தையும் இழந்தாள் எனினும் பட்டத்து ராணி என்ற மதிப்பை இழந்தாள் இல்லை, அவளது மகன்தான் கிரீடத்துக்குச் சொந்தக்காரன் என்ற பாத்யதையைப் பறிகொடுத்தாள் இல்லை.

“இந்த நிலையில் எனக்கு நிம்மதி ஏது மைத்துனரே! ஊரெல்லாம் அவள் பக்கம் அனுதாபம் காட்டுகிறது. அரசரும் அவளும் பிரிந்திருப்பது நாட்டுக்கு ஏற்பட்ட எதிர்பாராத கேடு என்று புலம்புகிறது, மக்கள் மன்றம். என்னுடைய குறுதிசயங்களைக் கொற்றவன் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை அதனால் என் வலையில் வீழ்ந்து விட்டார் என்று மந்திரிகளின் குழு மாரடித்து அழுது கொண்டிருக்கிறது. இளைய ராணி நான் — என்கிற மதிப்பைக் கூடத் தர மறுக்கிறது அரண்மனை வட்டாரம்.

“அரசரின் மஞ்சத்து ராணியாக மட்டுமின்றி, வெஞ்சமரில் வாளெடுத்து வேலெடுத்துப் போர் புரியும் வீராங்கனையுமன்றோ கோப்பெருந்தேவி—அவள் எங்கே? வளையொலியால் மலை நிகர்த்த வரை வளைத்துவிட்ட இவளெங்கே?— என்று வீரர்களின் பாசறைகளில் பேசப்படுகிறது. இத்தனை எதிர்ப்புக்களையும் சமாளிப்பதற்கு நான் தயாராகிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் மைத்துனரே! அவள் மகன் இன்பசாகரன் வளர்ந்து, இளவரசு மகுடத்தைத் தலையில் தூக்குவதற்குள் அழிக்கப்பட்டுவிடவேண்டும். சுந்தரபுரி சுழற்கண்ணியின் சொத்தாக மாறவேண்டும் என் வயிற்றிலே வளர்ந்து கொண்டிருக்கும் சிசு இந்த நாட்டுச் செங்கோலுக்கு உரிமை பாராட்ட வேண்டும் அதற்குத் தடை அவளது அருமருந்தன்ன ‘மகன்! தடை இடறப்பட ஒரு வழி கூறும் மைத்துனரே! உமது உதவியோடுதான் நான் ஜெயக்கொடி நாட்ட வேண்டும்.

“மைத்துனரே! உமது மறைவிலே நின்றுக்கொண்டுதான் என் ஜீவ லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும். ஏன் மௌனமாக இருக்கிறீர்—பேசும்; விலகி நின்று பேசுகிறேனே என்ற கோபமா? வேந்தர் வரும்நேரமாயிற்றே என்று நான் பயந்தேன்.

இதோ... மூடிக்கிடக்கும் உமது முரட்டு உதடுகளை எனது ரோஜா இதழ்களால் திறக்கிறேன்... ‘இச்!... இச்’! போதுமா? நீண்ட விருந்து மற்றொரு நாளைக்கு’ மைத்துனரே! சுந்தரபுரியின் ராணி சுழற் கண்ணி — அவள் குழந்தைக்கு இந்த நாடு உரியது—இப்படி ஒரு நல்லஎதிர்காலம் தோன்றுமா? அதற்கான திட்டம், உமது தீட்சண்யமிக்க மூளையிலே இப்போதே உதயமாகுமா?’

“கவலைப்படாதே சுழற்கண்ணி, இந்த தீட்சண்யன் இருக்கும் போது திட்டங்களுக்கா குறைவு? திக்திக்கும் முத்தங்களை நீ தந்தது போல் தித்திக்கும் யோசனைகளைத் தரவும் நான் தயங்கமாட்டேன். அரசரின் இளைய ராணியாவதற்கு அபூர்வமான ஆலோசனை வழங்கினேனே—அதை மறந்தாயா? அதைப்போலவே இளவரசன் இன்ப சாகரனை வாழ்க்கைப் புதரிலிருந்து பறித்துப் போடச் சரியான வழி கண்டு பிடிக்கிறேன். இன்பசாகரன் இளம் அரும்பு. அந்த அரும்பை விரலால் கூட நசுக்கி எறிந்துவிட முடியும் — நான் நினைத்தால்!

ஆனால், அந்த அரும்பு இருக்குமிடமோ அரண்மனைத்தோட்டம் வேலியற்ற கொல்லையல்ல, வேந்தன் வீட்டு முல்லை மொக்கு இருக்குமிடம் சர்வ ஜாக்கிரதையாகச் சதியை நிறைவேற்ற வேண்டும் இளவரசன் சாக வேண்டும். ஆனால் நாம் கொன்றதாகத் தெரியக் கூடாது—கொலை செய்யப் பட்டதாகவே செய்தி வருதல் கூடாது. இயற்கையாக இறந்தான் என்று நாடும் நாடாளும் மன்னனும் நம்ப வேண்டும். அதற்கு வழி சொல்லுகிறேன்!’

“சொல்லும் மைத்துனரே சீக்கிரம்!”

“இன்னொன்றுகொடு சொல்லுகிறேன்’

“இதோ! ஒன்றென்ன; ஒன்பது!”

“ஆகாகா! சுழல்! சொக்கி விட்டேன் — சொக்கிவிட்டேன்! முத்தப் போதையிலே மூளை வேலைநிறுத்தம் செய்து விட்டது. நாளை விடியற்காலை திட்டத்தோடு வந்துஉன்னைச் சந்திக்கிறேன்.’

“வேந்தர் பள்ளியறையை விட்டுப் போன பிறகு வாரும்.”

“அவர் இருக்கும்போது வர எனக்குப் பைத்தியமா?’

“சரி! திட்டம் நேர்த்தியாக இருக்க வேண்டும்”

“உன்னைப் போல?”

“இல்லை நம் உண்மைக் காதலைப் போல!’

“கைகாரியடி சுழற்கண்ணி நீ! கட்டிலறையிலே அரசனிடம் கூட இப்படித்தானே கதையளப்பாய்?”

“எனக்கு இரண்டு இருக்கிறது அத்தான் இருதயம்; ஒன்றில் உமது ஆசை; மற்றொன்றில் சுந்தரபுரியின் சிம்மாசனத்தைப் பற்றிய கனவு! இரண்டாவது இருதயத்தால் நான் அரசனைப்புகழ்கிறேன்—ஆராதிக்கிறேன்; ஆனந்தம் பொழிகிறேன்!”

“‘சுழல்’ நேரமாகிறது வருகிறேன்—அதோ அரசர் வருவது போல் தெரிகிறது!”

“விடியற்காலை — திட்டம்—மறந்து விடாதீர்!”

“விருந்து — அதையும் நீ மறந்து விடாதே’

சுழற்கண்ணி, அவன் பேச்சை ஆமோதிப்பதுபோலத் தலையசைத்துக் கொண்டு புன்னகை சிந்தினாள். தீட்சண்யனோ அந்தச் சிரிப்பை ரசித்தவாறு அந்த இடத்திலிருந்து நகர்ந்தான். தடித்த உதடுகளை அழுத்தமான நாவினால் தடவியபடி ஏதோ ஓர் இன்பச் சுவையை அனுபவித்தவாறு அந்த முரடன் சுழற்கண்ணியின் பார்வையிலிருந்து மறைவதற்கும் — “சுந்தரீ” என்றவாறு சுவைக்காவியம் படிப்பதற்கு அரசர் வருவதற்கும் சரியாக இருந்தது.

மன்னன் வந்தான். தீட்சண்யனிடத்திலே அவள் கூறியவை அனைத்தும் உண்மையே என்பதை நிரூபிப்பதுபோல் அவள் மடியில் சாய்த்தான் — பிடியில் சிக்கினான்.

சுழற்கண்ணி, சுந்தரபுரி மன்னனின் இளைய ராணி. அவளுக்கு மைத்துனன் தீட்சண்யன். தூரத்து உறவு. அரண்மனையிலே அவனுக்கு மெய்காப்பாளன் வேலை. அரசனது மெய்காக்கவும் — ஓய்வு கிடைத்து நேரம் வாய்க்கும்போது சுழற்கண்ணியின் மெய் தழுவிக் கிடக்கவும்— ஆகிய இரண்டு வேலைகளும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன அவனுக்கு! கனிரசம் பருகக் கசக்குமா? அதிலும் அவன் கரடித் திருமேனியன்! தேன்கூடு போலச் சுழற்கண்ணி, வளைய வளைய வருகிறாள். கொம்பு வளைந்து தேனைக் கொட்டிக் கரடிக்குப் பசி தீர்ப்பது போலக் கற்பனைகூடச் செய்ய முடியாது. சுந்தரபுரி அரண்மனையிலோ இது நித்திய நிகழ்ச்சியாக இருந்தது. பாறுங்கல்லை ஒத்த கரடு முரடான அவனது மார்பகத்தில் பச்சைக் கிளி போன்றவள் தொத்திக்கிடந்தாள்.

அவனோ, ‘என் இச்சைக்கினியவளே! இனிப்புதரும் இன்னமுதே!’ எனப் பாழ்த்த குரலெடுத்துப் பாடிக் கொண்டிருந்தான். திரைமறைவில் நடக்கும் இந்த அவமானகரமான அநியாயத்தின் அடையாளமும் தெரியாமல் அரசருக்கரசன் அவளை நோக்கி, ‘உத்தமியே! உயர்ந்தவளே! உல்லாசி! ஊர்வசி!’ எனப் புகழாரம் தொடுத்துக் கொண்டிருந்தான்.

சுந்தரபுரி சாம்ராஜ்யத்தை, சுடுகாடாக்க வந்த ‘வசந்தசேனை’ சுழற்கண்ணியின் உருவத்திலே உலவுகிறாள் என்பது அந்த ராஜரசிகனுக்குப் புரியாமல்தான் போய்விட்டது!

அரசனின் அந்தப்புர மயிலாக, ஆலோசனை வழங்கும் அமைச்சாகக் களம்புகு நேரத்தில் பின் தொடரும் மறத்தியாகச் சுந்தரபுரி மக்களின் சுகத்தைக் கவனிக்கும் பாசமுள்ள தாயாக அந்த மாளிகையிலே சுடர்விட்டுக் கொண்டிருந்த மாணிக்கமாம் கோப்பெருந் தேவியாரைக் கொந்தளிக்கும் கடலாக மாற்ற வந்து சேர்ந்தது கொடுமையான புயல், சுழற்கண்ணி என்றபெயரில்!

மன்னனுக்கு ராணியாகஇருந்த தேவி, இன்பசாகரனுக்குத் தாயாக மாறிய நேரம்தான், சுழற்கண்ணியின் படையெடுப்புக்கு ஏற்ற நேரமாகிவிட்டது. முற்றுகையிட்டாள், முடிசூடியை; உடனே வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டான் வேந்தன்!

ஆயிரந்தேர் — ஐயாயிரம் காவலாள் — ஆனைப்படை— புரவிச் சேனை அத்தனையும் தாக்கினாலும் அசைக்க முடியாது அவன் அரண்மனைக் கோட்டைச் சுவரை. அவளோ, ஒரு விழி வீச்சில் அவனது மனக்கோட்டையைச் சுக்கு நூறுக்கி, நொறுங்கிப் போன ஒவ்வொரு அணுவிலும் நின்று கொண்டு வெறியூட்டும் நர்த்தனம் புரிந்தாள்.

தேவி, இன்பசாகரனோடு தாய்க்குலத்தின் பெருமையைத் தரணிக்கு அறிவித்துக் கொண்டிருந்தாள்.

தேவனோ “திராட்சையிலும் இனியதடி இந்த ரசம்’ என இதழ் பருகிக்கொண்டு கிடந்தான் இளையவளோடு; அதுவும் அவனுக்குப் புதியவளோடு!

கதிர் மறைந்த உலகிற்கு இருள் நீக்கும் நிலவு போலக் கோப்பெருந்தேவியின் கவலை படிந்த வாழ்விற்கு வாட்டம் தவிர்க்கும் வைரமாக இன்பசாகரன் திகழ்ந்தான்.

பல கணியின் வழியாகத் தூரத்திலிருக்கும் பூரண சந்திரனைப் பார்த்து ரசிப்பதிலே ஒரு மகிழ்ச்சி இல்லையா? அதுபோலவே அரசனை அருகிலே வைத்து அன்பு காட்ட முடியாவிட்டாலும் தொலைவிலேயிருந்து அவனைத் தொழுது கொண்டிருந்தாள் கோப்பெருந்தேவி.

பலகணிப் பார்வையாளர்மீது நிலவு, ஒளிமழையையாவது பெய்கிறது; அதுவும் கிடைக்கவில்லை அந்த அபாக்கியவதிக்கு!

இன்பசாகரன் மட்டுமே அவளுக்கு ஆறுதல் பொருளானான்; அந்தப் பொருளையும் பூமியிலே புதைத்துவிடத் துடித்துக் கொண்டிருந்தாள் சுழற் கண்ணி. அதற்கான திட்டத்தையும் தீட்சண்யன் தயாரித்து விட்டான்.

“இந்தச் சதியில் ஜெயம் நமக்கே!” என்று ஒருவரையொருவர் தழுவியபடி உரக்கக் கூவி மகிழ்ந்தனர்—ஊர் கெடுக்க வந்த ஜாலக்காரர்கள்,

திட்டத்தின் முதற் கட்டம் மிகத் தீவிரமாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது,

திடீரெனச் சுழற்கண்ணி இளவரசன் இன்பசாகரன் மீது அன்பு மழை பொழிய ஆரம்பித்தாள். “அக்காளுக்கும் என்னைப் போலத்தானே ஆசையிருக்கும். அவளோடும் பேசி மகிழ்ந்து கூடிக் குலவியிருப்பதுதானே தங்களைப் போன்ற தர்மம் தவறுதவர்களுக்குத் தகுதியான காரியம்!” என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தாள் மன்னனிடம்!







“தேவி! நான் எப்படியோ விதியின் மாயையால் உங்கள் வாழ்வில் குறுக்கிட்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் இனி நான் எங்கே போவேன்? தங்கள் தங்கையாக என்னைக் கருதி எனக்கு வாழ்வு அளியுங்கள்’ என்று கோப்பெருந்தேவியின்பாதங்களில் கண்ணீரைச் சொரிந்தாள்.

மன்னன் — மகாராணி — இளவரசன் அனைவருமே அவளது மாய்மாலத்தில் மயங்கினர்.

“அரண்மனையில் புதிய இன்பம்! சந்தோஷமான திருப்பம்! அரசரும் அரசியும் ஒற்றுமைப் பட்டு விட்டனர். — சுழற் கண்ணி, தன் தவறுகளை உணர்ந்து திருந்தி விட்டாள். அப்பப்பா! இளைய ராணி இப்போது இன்ப சாகரனை எப்படி கவனிக்கிறாள் தெரியுமா! பெற்ற தாய் கூட இவ்வளவு அன்பு காட்ட முடியாது!” என்று சுந்தரபுரி முழுதும் குரல் கிளம்பியது.

இளவரசன் இப்போதெல்லாம் தாயிடம் கூட அவ்வளவு அதிகமாகத் தங்குவதில்லை. இளைய ராணியின்மாளிகையிலேயே விளையாடிக் கிடக்கிறான் அவள் கையால்தான் அவனுக்கு உணவு தர வேண்டும். அவள் சொன்னால்தான் எதையும் கேட்பான். இது கண்டு அரண்மனையே அதிசயித்தது. அரசரும் சுழற்கண்ணியின்மீது புதிய பாசம் கொண்டார். அரசியும் அவளைத் தன் அருமைத் தங்கை போல நடத்தினாள். தங்கையின் நெஞ்சிலே புகையும் நெருப்பை அவள் எங்கே கண்டாள்?

ஒருநாள் சுழற் கண்ணியின் மாளிகையில் இன்பசாகரன் குழல் வாத்தியக் கருவியுடன் நுழைந்தான். தெரியாதவள் போல அவள் “ஏது இந்தக் குழல் வாத்தியம்?’ என்று கேட்டு வைத்தாள்

“தீட்சண்யன் கொடுத்தானம்மா! ’ என்று கூறியபடி அதை ஊதிக்கொண்டு கூத்தாடினான் இன்பசாகரன்.

சதித்திட்டம் இரண்டாவது கட்டத்தை அடைந்துவிட்விட்டது இனி ஆரம்பிக்க வேண்டியதுதான் நமது வேலையை என்ற முடிவோடு, அவள் அவனைத்தழுவியெடுத்துத் தன் மஞ்சத்தின் பக்கம் உட்கார வைத்து முத்தங்களால் அவன் முகத்தைச் சிவக்க வைத்தாள்.

தின்பதற்காக ரோஜாப்பூவைப் பறிப்பவர்கள் அதன் மென்மையையும் வண்ணத்தையும் வியந்து கொண்டா இருப்பார்கள்! இதழ்களைக் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டே கடைசியில் அந்தக் காம்பை எறிந்து விடுவார்கள்!

அப்படித்தானிருந்தது — அவள் அந்த மலரொத்த இளைய மன்னனை எடுத்து முத்தமிட்டதும், அருகே உட்கார வைத்துக் கொண்டதும்!

“கண்மணி! உனக்கு ஓர் அருமையான பண் கற்றுத் தருகிறேன். அதை இந்தக் குழலில் நீ ஊதினால் பிரமாதமாக இருக்கும்!’ என்று பேச்சை ஆரம்பித்தாள். வயதில் இளமையும், வஞ்சத்தில் முதுமையும் கொண்ட அந்த வடிவழகி!

“கற்றுக் கொடம்மா!” என்று

(8-ம் பக்கம் பார்க்க)

# தாய்மை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

குழலை அவளிடம் கொடுத்தான் இளவல்.

அவனும் குழல் மூலம் பண் எழுப்பினுன். "இனிமை! இனிமை'!" எனப் பாராட்டினர் தோழியர்.

அந்தப் பண் பாலகனின் மனத்தையும் கொள்ளை கொண்டது. தானும் அதைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்கிற ஆர்வம் இளம் நெஞ்சில் கொழுந்து விட்டது.

'எப்படியாவது எனக்கு இந்தப் பண்ணைக் கற்றுக்கொடம்மா எனப் பிடிவாதம் செய்தான்.

அவளும் அந்த வேண்டுகோளைத் தான் அந்தப் பிஞ்சு மனத்திலேயிருந்து எதிர் பார்க்கிருள்.

இரண்டு நாள் சிரமம் எடுத்துக் கொண்டான் இளவரசன்—பண் பாடமாகிவிட்டது.

"அருமை தம்பி! அருமை! நான் வாசித்ததை விட நீ வாசிக்கும்போது, பண்ணிலே மழலையின் இனிமை மறைந்திருக்கிறது! பெருமையை அதிகமாக்குகிறது, ஆகா! இந்தக் கீதத்தை அரண்மனை நந்தவனத்திலே உட்கார்ந்து வாசித்தால் மயில்கள் எல்லாம் தாமே வந்து எதிரே நின்று ஆடும்!' என்று சாகசப்பேச்சைதாய்க் குரலிலே கலந்து தந்தாள் சுந்தகண்ணி!

"இதோ இப்போதே போய்த் தோட்டத்தில் வாசிக்கிறேன் தோகை மயில்கள் ஆடுகின்றனவா என்று பார்க்கிறேன்' எனக் குழலுடன் ஓட்டம் பிடித்தான் இளவரசன்.

சுழலியின் கண்கள் அகல விரிந்தன- அவள் முகத்தில் புதிய தேஜஸ் காணப்பட்டது. "வெற்றி! வெற்றி!" எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள், மகிழ்ச்சியோடு!

அரண்மனைத் தோட்டம்—அடுக்கு மல்லிகைப் புதரின் ஓரம் — அழகே உருவெடுத்த அரசிளங்குமரன் ஆரம்பித்து விட்டான் குழல் வாத்தியத்தை. இளையவள் கற்றுத் தந்த பண்ணை மாறி மாறி ஊதினுன். பாவம்; அவனுக்கென்ன தெரியும் அவள் கற்றுத் தந்த கீதம் பாம்புகளை அருகே வரவழைக்கும் கீதமென்று!

பண்ணை அவனுக்குப் பாடமாக்க வேண்டும்-அவன் அதை ஊதிக்கொண்டிருக்கும் போது தோட்டத்தில்தொலைவிலே விஷப் பாம்பை விட்டுவிட வேண்டும்; குழலோசை கேட்டுப் பாம்பு அவனருகே வந்து படமெடுத்து ஆடும். பண்ணை அவன் நிறுத்தினுல், உடனே பாம்பு அவன்மீது சீறிப் பாய்ந்து விடும்.

இப்படியொரு திட்டத்தைத் திட்சண்டன் தீட்டித் தந்து அதற்கு வெகுமதியாக அவளிடம் பெற வேண்டியதைப் பெற்று, அவளும இளவரசனை அரண்மனைத் தோட்டத்திற்கு அனுப்பி விட்டாள். இன்பசாகரனின் குழலோசை குளிர்ச்சியை மொண்டு மொண்டு ஊற்றியது! ஆனந்தத் தென்றல் வந்து ஆரத் தழுவுவது போன்ற உணர்ச்சியைத் தந்தது.

மகுடியிலும் இல்லாத மயக்க உணர்வை அந்தக் குழலிலேயிருந்து புறப்பட்ட பண் கிளப்பியது.

நேரம் பார்த்துக்கொண்டிருந்த கோர மனிதன் திட்சண்யன், தான் பிடித்து வைத்திருந்த பாம்பை இளவரசனுக்கு அருகேயுள்ள புதரின் பக்கமாகக் கீழே விட்டான். விடுபட்ட பாம்பு, குழலோசை நோக்கி நகர்ந்தது. தன்னை நோக்கி ஆபத்து ஊர்ந்து வருகிறது என்பதை அறியாத அந்த அழகுப் பிறை நிலவு சின்னம்மா கற்றுத் தந்த பண்ணை விடாமல் ஊதிக்கொண்டே இருந்தது

இன்னும் சிறிது நாழிகையில் மயில்கள் எல்லாம் வந்து தன் முன்னே ஆடப்போகின்றன என்ற நினைவோடு இன்னும்-இன்னும் அதிக உற்சாகத்தோடு குழல் ஒலி புறப்பட்டது!

நகர்ந்து வந்த நாகம் படமெடுத்தபடி பாலகனின் எதிரே மயங்கி நின்றது. அதைப் பார்க்காத இளவரசன் குழலூதும் கவனத்தில் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

கண்களை மூடிக்கொண்டே குழல் ஊதுவது-திடீரெனத் திறந்து பார்த்தால் எதிரே மயில்கள் ஆடும்— அதைப் பார்த்து மகிழ்வது! இப்படி ஓர் இன்பக் கனவோடு அவன் இசை முழக்கம் செய்து கொண்டிருந்தான்.

'அவன் என்ன கண்டான்- எதிரே உயிர் வாங்கும் பாம்பு பல்லிலே விஷம் தேக்கியபடி ஆடிக்கொண்டிருக்கிறது என்பதை!

மயங்கி நிற்கிறது நாகம். மயக்கம் தெளிந்தால் இளவரசன் அதற்கு இரையாவான்!

இசை நின்றுல். உடனே பாம்பின் மயக்கமும் தெளிந்துவிடும்!

என்ன நடக்கப் போகிறது என்பதை உப்பரிகையில் இருந்தபடியே இளையவள் பார்த்துக்கொண்டிருந்தாள்.

புதரின் மறைவில் இருந்தபடியே திட்சண்யன் புன்னகை சிந்திக்கொண்டிருந்தான்

அந்தக் கொடுமையைக் காண்பதற்குக் கோப்பெருந்தேவியும் அங்கு வந்து சேர்ந்தாள். கீதம் அவளைக் கவர்ந்தது எங்கிருந்து வருகிறது எனக் கவனித்தாள் இன்பநாதம் எழுப்புவது தன் மகன் எனக் கண்டாள்; மகிழ்ந்தாள். அடுத்த கணம் மகிழ்ச்சி மறைந்தது. கந்தரபுரியின் எதிர்கால மன்னன் — அவனெதிரே சாவின் நர்த்தனம்:

வயிற்றிலே கிடந்த வைடூரியம்! அதை விஷந்தால் குளிப்பாட்டி வேகவைக்க எதிர மரணத்தின் மயக்கம் நிறைந்த சதிராட்டம்!

'அய்யய்யோ! என்ன செய்வேன்!' என நிமிர்ந்தாள். இளையவள் திட்சண்யன் இருந்து வரும் இருப்பதை உணர்ந்தாள்.

அவர்களைப் பார்க்காதவள் போல் பாலகன் பின்னே வந்தாள். அவளுக்குப் புரிந்துவிட்டது - சதி பற்றிய விளக்கம்; குழலோசை நின்றுல்—பின் குமரனைப் பாம்பு தீண்டிவிடும் என்பதையும் தெரிந்து கொண்டாள் அவளது தாய் உள்ளம் தணலிலிட்ட புழு வாயிற்று.

எந்தத் தாய்க்குத்தான் சகிக்கும்! தான் பெற்ற தங்க விக்ரகத்தின் மேனிபெங்கும் நீலம் பாய்ந்து. அலங்கோலமாக விழப்போவதை எந்த அன்னைக்குத்தான் தாங்கிக் கொள்ள முடியும்!

"இன்பசாகரா!" என்று சப்தம் போட்டால் அவன் திடீரெனக் குழல் வாசிப்பதை நிறுத்தி விடுவான். உடனே நாகம் தன் வேலையைமுடித்து விடும். என் செய்வாள் தாய்? கத்தினுள் எப்படி?

"இன்பசாகரா!... வாத்தியத்தை நிறுத்தாதே! நிறுத்தாதே! ஊதிக்கொண்டேயிரு!" என்று அலறினுள்.

தாயின் குரல் அந்த இளவலின் காதிலே ஒலித்தது. கண்ணைத் திறந்தான். எதிரே பாம்பு! நடுக்கம் தாங்கமுடியவில்லை. எழ முடியாதபடி ஆகிவிட்டான்! தாயோ தொடர்ந்து சப்தமிட்டுக் கொண்டேயிருந்தாள்:

"நிறுத்தாதே! ஊது!! ஊது!" என்று.

அவனும் ஊதிக்கொண்டேயிருந்தான், ஏன், எதற்கு என்று புரியாத நிலைமையில்!

"ஊது! ஊது'!" என்று கூறிக் கொண்டே— தாய் அவனருகே வந்துகொண்டிருந்தாள்.

குழலோசை உச்ச சட்டத்தை அடைந்தது. நாகமும் இன்னும் மேலே உயர்ந்து படந்தூக்கி ஆடியது.

'நிறுத்தாதே' ஊது' ஊது!"— தொடர்ந்து அலறல்! அதை பொட்டி 'ஆ!' என்ற சப்தம்!

ஆம்; கோப்பெருந்தேவி, தடாரென்று அந்தப் பாம்பின் முன்னே விழுந்தாள்.

படமெடுத்திருந்த பாம்பு அவள் மீது பாய்ந்தது—அவள் உடலில் விஷம் பரவியது. இனி யென்ன? பாம்பு ஓடியது. ஓடுகின்ற பாம்பை வாளால் வீசிக் கொன்றுவிட்டு அங்கு ஓடி வந்துவிழுந்தான் மன்னவன்;

'பிரபு! பிரபு!"

கோப்பெருந்தேவி அழுதாள்

செல்வத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று இன்பசாகரனை இழுந்து அரசனின் கையில் ஒப்புவித்தாள்.

"அம்மா!' என ஓலமிட்டான் இளவரசன். தாய்மை தன் கடமையைச் செய்துவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டது.

அரசன் இளைய ராணியையும் தீட்சண்பனையும் வெறித்துப் பார்த்தான். அவர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்துக்கொண்டிருந்தனர்.

"விடாதீர்கள். அவர்களை!" என்று கத்தினுன்.

"அய்யோ! ஒரு விநாடி தவறிவிட்டது-இல்லையேல் நாகத்தை வாளால் நறுக்கிவிட்டு மனைவி மகன் இருவரையுமே காப்பாற்றியிருப்பேன்!" என அங்கலாய்த்துக் கொண்டான் அரசன்.

என் செய்வது? தாய்மையின் மதிப்பு தரணிக்குத் தெரிய வேண்டுமே-அதனுல்தான் போலும் அவன்சிறிது தாமதமாக அங்கு வர நேர்ந்தது!

# வந்த மடல்

## இலக்கிய இன்பம் தரும் 'நம் நாடு'

ஐயா,

கிழமை தோறும் வெளிவரும் 'நம் நாடு' எனும் அறிவு மலரைத் தொடர்ந்து படித்துவரும் வாசகர்களுள் நானும் ஒருவன் என்பதை குறிப்பிடுவதில் பெருமை கொள்கிறேன். படைப்பு தொகுப்பு, அமைப்பு ஆகியவை மற்ற தமிழ் இதழ்களை விட 'நம் நாடு' ஏட்டில் சிறப்பாக இருக்கிறது.

சமுதாயத்தின் சங்கநாதமாக, சிங்கக் குரல் எழுப்பும் சிறந்த பத்திரிகை 'நம் நாடு' என்பதை கலைஞரின் ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் பட்டவர்த்தனமாக நிரூபித்துவிட்டது குறிப்பாக 'சுமந்தவள்' என்ற எழுத்தோவியம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் வீரவாளாக 'நம் நாடு' வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

'நம் நாடு' 26—3—78 இதழில் வெளியான கட்டுரைகள் அனைத்தும் கருத்துச் செறிவுடனும், சிந்தனையைத் தூண்டும் வண்ணமும் நன்கு அமைந்துள்ளன. கிழமை தோறும் பிரசுரமாகும் கலைஞரின் ஒவ்வொரு கடிதமும் அறிவுக்குச் சுவை தரும் கருத்துக் கருவூலம் என்பதனை யாரும் மறுக்கவோ. மறைக்கவோ முடியாது.

பத்திரிகா தர்மத்தைவிட்டு ஓர் அணுவும் விலகாமல், உண்மைக்கு மாத்திரமே மதிப்பளித்து செய்திகளையும் வெளியிட்டுவரும் 'நம நாடு' இன்று தமிழ் மக்கள் மத்தியிலே ஓர் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை. வாசகர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்களை இலக்கிய உணர்வோடு தொகுத்து வழங்குவதில் 'நம் நாடு' முன்னணியில் திகழ்கிறது.

அன்பன்.
—'இடி முரசு'
டார்ஜான் ரஹிமான்.
சென்னை - 14.

ஃ ஃ ஃ

## மொழிவெறி யாரிடம்?...

ஐயா,

புல்வெளியில் மேய்ந்து கொண்டிருக்கும் மாடு தனது வயல் வெளியில் காலெடுத்து வைத்துவிடக் கூடாது என்பதில், நிலம் கொத்தி, நீர் நிரப்பி உரமிட்டு உழுத விவசாயி எச்சரிக்கையாய் இருப்பது எந்த விதத்தில் வெறியாகும்?

வடவர்கள் தங்கள் மொழியை மற்ற மாநில மக்கள்மீது திணிப்பதில் அவசரம் காட்டுகிருர்கள் நாம் அதில் எச்சரிக்கையாய் இருக்கிறோம், இவற்றில் எது மொழிவெறி?

'மிசாராணியின்' ஆட்சி மாறி புதிய கட்சி ஆட்சிக்கு வந்ததும் மொழிப்பிரச்சினையில் ஒரு நம்பிக்கையான போக்கினை எதிர்பார்த்துத் தென்னகம ஏமாற்றமடைந்து வருகிறது.

பிரதமர் மொரார்ஜிதேசாய் இந்தி பேசாத மற்றைய மாநில மக்களுக்கு அடிக்கடி சமாதானம் சொல்லி வருகிறார். இதன் பொருள் என்ன?

'வடவர்'களில் பலர் இந்தியைத் திணிப்பதில் அவசரம் காட்டுவது அவருக்குப் புரிகிறது. அது ஐக்கிய இந்தியாவிற்கு ஊறு விளைவிக்கும் போக்கு என்பதை அவர் புரிந்திருப்பின் 'வடவர்களைத்தான் எச்சரிக்கை செய்ய வேண்டுமே அல்லாது இந்தி அல்லாத பிற மக்களுக்குச்சமாதானம் கூறுவதில் எந்தவித நியாயமுமில்லை.

அன்பன்,
தமிழ் மார்பன்,
பொள்ளாச்சி.

ஃ ஃ ஃ

## ஏங்கித்துடிக்க வைக்கும் எழுத்து

கருத்துக்கு விருந்தாகி தமிழர்தம் எழுச்சிக்கு வித்தாகி கொட்டிவைத்த மாம்பழமாய், கட்டிவைத்த பூச்சரமாய் கற்கண்டு சொல்லழகால் படிப்போரையும்—கேட்போரையும், சொக்கவைத்து, ஏங்கவைக்கும் கலைஞரின் கைவண்ணத்தைத் தாங்கி வரும 'நம் நாடு'. விலையேற்ற நெருக்கத்தால் நின்றுவிடக் கூடுமென்று "உடன் பிறப்பு" பகுதியில் கலைஞர் மிக வருத்தமாக எழுதியிருந்ததைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டேன்.

பெரியாரும், அண்ணவும் போன பிறகு உலகத் தமிழர்க்கெல்லாம் காவல் அரணாய், கலங்கரை விளக்காய் நின்று காத்துவரும் கலைஞரே ஈடு இணையில்லாத்தலைவரே, தன்மானக் கண்ணொளி தந்த டாக்டரே, உங்கள் புனித விரல்பட்டு அசைகின்ற பேனமுனையில் சிந்துகின்ற முத்துக்கருத்துக்களை, கனித் தமிழ்தேன் துளிகளைப் பருகுதற்குப் போட்டியிட்டுப் படையெடுத்து வருகின்றோம்.

இந்த வாரம் இப்படி, அடுத்த வாரம் எப்படியோ என்று எங்களை ஏங்கித் துடிக்கவைக்கும் உங்கள் சிங்கநடை எழுத்தும், பாமர மக்களின் சினிமா மயக்கத்தைப் பயன்படுத்தி சந்தர்ப்பவசத்தால் ஆளவந்தவர்கள் ஆடிக்கொண்டிருப்பதைப்படம் பிடித்துக் காட்டும்—கழகத் தூண்களின் கருத்துக்களும் அறிவுக்கு விருந்தாகி உணர்ச்சி கொள்ள வைத்து, ஆண்ட செந்தமிழ்ப் பாண்டியன் காலத்துக்கே. அழைத்துச் செல்கிறது. ஆகவே தயவுசெய்து இதழை நிறுத்தாதீர்கள் விலை ஐம்பது காசுகள்என்ன, ஐநூறு காசுகள் ஆனுலும் 'நம் நாடு' தொடரட்டும், வளரட்டும்.

அன்பன்,
இரா முல்லை பன்னீர்செல்வன்
பேரணும்பட்டு.

## சிறுமியைச் சீரழித்த 'மனித மிருகங்கள்'

டில்லியில் வாழும் பியாரேலால் என்பவர் செருப்புத்தைக்கும் தாழ்த்தப்பட்ட ஒரு ஏழை. அவருடைய இரண்டு மகன்களும் 1947ஆம் ஆண்டு 'இந்தியா — பாகிஸ்தான்' பிரிவினையின்போது நடந்த மதச் சண்டைகளின் போது கொல்லப்பட்டார்கள். இப்போது அவருக்கும் அவருடைய மனைவிக்கும் ஒரே ஒரு சிறுமி தான், 'பிள்ளைச் செல்வமாக' விளங்குகிருள்.

பள்ளியில் படிக்கும் அச்சிறுமி விஞ்ஞான பாடத்தில் தனக்கேற்பட்ட சந்தேகத்தை ராகேஷ் ஜெயின் என்ற தெரிந்த பழ வியாபாரியிடம் கேட்டாள். அவன் அவள் சந்தேகத்தைத் தீர்ப்பதோடு மேலும் தெளிவாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதாகக் கூறி 'ராம்லீலா' மைதானத்திற்கு எதிரே இருக்கும் வீடொன்றின் முதல்மாடி அறைக்கு இட்டுச் சென்ருன்.

அவளை அங்கு இருக்க வைத்து "சிறிது நேரத்தில் வந்துவிடுகிறேன்" என்று கூறி அவ்விடத்தைவிட்டு அகன்ருன் ஜெயின்!

அவன் போனதுமே பதினன்கு — 'மனித மிருகங்கள்' அந்தப்பால் வடியும் முகம் கொண்ட சிறுமியை — மாற்றி மாற்றி — முப்பது மணி நேரம் — சொல்ல நா கூசுகிறது, நெஞ்சம் பதறுகிறது....

காவலர்கள் அந்தக் காதகர்களைப் பிடித்து விட்டார்கள். அவர்களில் மூவர் பொறுப்பு மிக்க அரசாங்கப் பணியில் இருப்பவர்கள்.

குற்றவாளிகளுக்கு வேண்டியவர்கள் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு பியாரேலால் முன் பணக்கற்றையைக் காட்டி ஆசை மூட்டுகிருர்களாம்.

தங்களின் ஒரே செல்வத்தைச் சீரழித்த கயவர்கள் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும் என்பதில் சிறுமியின் பெற்ருேர்கள் உறுதியாகஇருக்கிருர்கள்.

அப்படி அவர்கள் தண்டிக்கப்படாவிட்டால், 'ஒரு சத்தியாகிரகமே நடத்துவேன்' என்கிருராம் பியாரேலால்.

# இலக்கியப் பூங்காவில் பூத்த புரட்சி மலர்!

-: வல்லம். இல. ஆலையழகன் :-

"எனது பேனா துப்பாக்கிக்கு இணையாக இருக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கும் திட்டக் கர்த்தாக்கள் எனது கவிதையையும் அரசாங்கத்தின் ஒரு பகுதியாகக் கொண்டு கவிதை உற்பத்தியின் அபிவிருத்தி பற்றியும் வியர்வை சிந்த விவாதிக்க வேண்டும்' என்று சோவியத்தின் புரட்சிக் கவிஞன் மயாகாவ்ஸ்கி பாடினன்.

ஆமாம்; எந்தவொரு இலக்கியவாதிக்கும், அது சுதந்திரமான சிந்தனை, ஆக்கபூர்வமான எண்ணங்கள் அதற்கான வழிகள் இவைகளை வெளியிடும் உரிமையை இந்தப் பரந்தவுலகம் எவ்வளவுக்கெவ்வளவு அனுமதிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கிஞ்சிற்றும் குறையாமல் அவனது தன்னம்பிக்கையான வெளிப்பாடுகளை — அர்த்தமுள்ள கர்வங்களை. அலட்சியமான அந்த நிமிர்ந்த நடையை இந்தவுலகம் அனுமதிக்கும் என்பதில் கடுகேனும் சந்தேகமில்லை.

இதைத்தான் சோவியத் நாட்டுப் பெருங்கவிஞனின் பாடலிலே நாம் காண முடிகிறது. ஆம்; எழுத்தை வைத்தே இந்தவுலகம் ஓர் எழுத்தாளனை — ஒரு கவிஞனை மதிக்க வேண்டும் என்பதில் யாருக்கும் இருவித கருத்து இருக்க முடியாது. அது எழுத்தாளர்களின் எழுத்தால் கவிஞர்களின் கவிதையால் ஏதாவது ஒரு சமூகத்தில் — சமுதாயத்தில் ஏதேனும் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்துள்ளனவா? அந்தப் படைப்பாளர்களின் படைப்புக்கள் சோவியத் நாட்டுக் கவிஞர் சொல்வதுபோல் விவாதிக்கப்பட்டனவா? என்று பார்க்கவேண்டும்.

ஒரு படைப்பாளனின் எழுத்தினை ஓர் அரசாங்கம் உற்றுக் கவனித்தது. அந்தப் படைப்பாளனின் கருத்துக்களைப் பற்றி உன்னிப்பாக விமர்சனம் செய்தது. அதனைப் பற்றிய விவாதங்களை அவ்வப்பொழுது நடத்தியது, பல 'மேதாவிகளின் தரிசனங் கண்டே அவன் எழுத்துக்கள் பொதுமக்களின் பார்வைக்கு அனுப்பவேண்டும்என்று நெருக்கடி நிலையில் மட்டுமல்ல — அந்தப் படைப்பாளன் எழுத ஆரம்பித்த நாள் முதலாகவே அவனை 'இருட்டடிப்பு' செய்ய முயற்சி நடந்தது.

தமிழக பூமி மடமைத் தீயினில் முழுமையாகவே கருகிவிடத்தக்க அளவில் சென்று கொண்டிருந்த நேரம்... அதனைச் சீர்திருத்த நீர் கொண்டு வெம்மை போக்கி தண்ணொளி தரும் — நிலவு குளிரும் வள பூமியாக்கிய வீரர்கள் படையில் இவரொரு வீரர் மட்டுமல்ல முன்னணித் தளபதியுங்கூட!

எண்ணற்ற எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டுதானிருந்தார்கள். இருந்தாலும் அவர்களின் எழுத்துக்கள் 'ஏதோ'வாக இருந்தனவே தவிர, இதோ ஒரு புரட்சி மலர் பூத்துவிட்டது எனச் சொல்லத்தக்க அளவில் இருந்ததில்லை.

இன்னும் சிலர் எழுதத்தான் செய்தனர்; அவர்கள் வாலிப உள்ளங்களை 'மதமதப் பாக்கத்தக்க' கதகதப்'புக் கதைகளை வதவதவென்று அச்சேற்றிக் கொண்டிருந்தனர்!

அந்தநேரம்தான்... பழைய தமிழ்ப் பண்புகளை — உயரிய இலக்கியங்கள் காட்டும் ஒப்பற்ற வாழ்வுதனை ஒண்டமிழில் எடுத்துரைத்து, உலுத்துப்போன கருத்துக்களை இந்தச் சமுதாயத்தில் உலவவிட்டு, அதன் மூலம் பிழைத்து வந்த ஏமாற்றுப் பேர்வழிகள் எதிர்த் திசைகளை நோக்கி தலைதெறித்து ஓட பகுத்தறிவுக் கருத்துக்களைப் படையலாக்கி, அழகு தமிழ் வசனங்களை ஆற்றுப் பெருக்கென ஓடவிட்டுப் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் புதுமைப் படைப்புக்களைப் படைத்தளித்தார் கலைஞர். டாக்டர் கலைஞர் அவரது எழுத்துக்கள் சிலவற்றைத் தொட்டுப் பார்க்கத் துணியும்போது...?

உயர்நிலைப் பள்ளிப் படிப்பின்போதே 'முரசொலி' கையேடு நடத்திய அந்தப் பெருமகனின் ஈடிணையற்ற ஆர்வத்தை, தன் இளமையைத் தமிழுக்காக பலியாக்கவும்தயங்காத அந்தத் திருமகனை என்னவென்று சொல்லி இதயத்தில் ஏற்படும் உணர்வுகளை இறக்கிவைப்போம்!

'புராணப் படங்கள்தான் திரைப்படத்துறையில் வெற்றிகாண முடியும்' என்றிருந்த சொத்தை வாதத்தினைச் சோதையாக்கிய பெருமையும் — ஆத்திக சாமிகளின் சரித்திரத்தைப்பின்பற்றி — காலட்சேப வசனம் எழுதியபோக்கினை அடியோடு தகர்த்து மறுமலர்ச்சி யூட்டிடபெருமையும் இவருக்குண்டு ஏன் — 'அவாள்' கற்பனையில் சிருஷ்டித்த அவதாரங்களை மட்டுமே மக்களின் அறியாமை கண்களிடைப் படமாக்கிக் காட்ட முடியும் என்ற நிலையினைத் தலைகீழாக மாற்றிய பெருமை இவருக்குண்டு!

எத்தனையோ பேர்களின் கையில் அகப்பட்ட பேனா, மடமைச் சிந்தினையை அசிங்கமாக்கத்தான் பயன்பட்டிருக்கின்றதே தவிர, எதிர்காலச் சரித்திரத்தை மாற்றியமைக்க — இன்றைய இருள் போக்கி ஒளியுமிழும் ஒரு பொற்காலத்தைக் காண, முடுக்கிவிடும் வார்த்தைக் கோர்வைகள் அடங்கிய வண்டமிழ் ஓவியங்களாக வடித்தெடுக்கப் பயன்படுத்தப்பட்டதில்லை.

இவர் கரங்களில் ஏறிய போது சோர்ந்துகிடந்த பேனக்களும் சுழல ஆரம்பித்தன. மடமைக் கடலில் மக்களைத் தள்ளி அதன்மூலம் தாங்கள் மட்டும் சொகுசுப் பயணம் நடத்திவந்த சோம்பேறி மதவாதிகளை நோக்கி, கனல் கக்கும் வசனங்களை உமிழ ஆரம்பித்தன... ஏமாற்றுப் பேர்வழிகளின் இதயங்களை உடைக்கும் கோடரிகளாக மாறின; கூர் ஈட்டிகளாகப் பணியாற்றத் தொடங்கின.

இதோ... இதோ... இவர் பேனவைச் சுழலவிடுகிருர். இல்லையில்லை — பேனு இவரது கரத்தினின்று தானகவே சுழல ஆரம்பிக்கின்றது. வாசகங்கள் அழகிய வடிவங்களைத் தாங்குகின்றன.

"குழந்தைகளை மலர்கள் என்கின்ருேம் — மாணிக்கப் பரல்கள் என்கின்ருேம் - அதன் கண்கள் நீலோற்பலம்! இதழ் ரோஜா! சிரிப்பு பிறைநிலா! அசைவு தென்றல்! வடிவு தங்கப்பதுமை!" — இப்படி எழுதி வசந்தத்தின் வடிவழகான உருவத்தைக் காட்டிய இவரது பேனு இதோ இப்படியும் —

"அதோ, கிழிந்த சாக்குப் படுதா தொங்குகிறதே — அதுதான் அந்த மாளிகையின் மரகதக் கதவு! சேறும் சகதியும் வழிந்தோடுகிறதல்லவா வளைந்து வளைந்து, அதுதான் அந்த அரண்மனையைச் சுற்றியுள்ள அகழி; அந்த அகழிமீது துள்ளி விளையாடுகிறதே தொப்பை சுருங்கிய குழந்தை, அதுதான் அந்த வீட்டு மகாராணியின் முதல் இளவரசன் — அடுத்து ஒன்று கூம்பிய கால் கைகளுடன் தள்ளாடி தள்ளாடி ராகம் பாடுகிறதே, அது இளவரசி — மகாராணியின் தோள் மீது ஒன்றும், மடிமீது ஒன்றும்

(10-ம் பக்கம் பார்க்க)

## அக்கிரமங்களுக்குத் துணைபோன அன்னை!

இந்திரா காந்தி தாம் ஒரு பெண் என்பதை மட்டுமல்ல; பலகீனமான, தடுக்கச் சக்தியற்ற பெண் - ஒரு தாய் என்பதையும் இறுதியாக மெய்ப்பித்துவிட்டார்.

தன் மகனுக்காக, தாய் என்பவள் பொய்யுரைப்பாள்; ஏமாற்றத் துணிவாள்; களவாடவும் செய்வாள்; பிறர் உயிரைப் பறிப்பாள்; தேவைப்பட்டால் தன்னுயிரையும் தருவாள்; இவைகளையெல்லாம் இந்திரா செய்ததோடு மட்டுமல்ல, பிறரைக் கொல்லவும், துன்புறுத்தவும், ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் வீடுகளை இழந்து பரிதவித்துத் தெருவில் திரியவும் — கட்டளையிடுவதற்கான சுதந்திரத்தைத் தம் மகனுக்கு வழங்கினுர்.

—[ கே. ஏ. அப்பாஸ் எழுதிய '20th March, 77—A Day Like Any Other Day' என்ற நூலிலிருந்து.]

# இலக்கியப் பூங்காவில்....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புக் குச்சிகளாம் தேரைபோல் ஒட்டிக்கொண்டு, சிணுங்கி அழுவதற்கும் ஜீவனில்லாமல் கிடக்கின்றனவே அவைதான் மலர்க் கொத்துக்கள், மாணிக்கப் பரல்கள்!''

அடேயப்பா! குழந்தைகளின் வடிவு எப்படி எழிலோடு இருக்கவேண்டும் என செப்ப ஆரம்பித்தவர், ஒரு சேரியில் வாழும், ஏழ்மையில் மூழ்கிய ஒரு குடும்பத்தினை—குழந்தைகளால் அல்லல்படும் ஒரு வீட்டின் நிலையினை எவ்வளவு தத்ரூபமாகப் படம் பிடித்து, கண்முன்னே கொண்டுவந்து காட்டுகிறார்.

'மூடு' வந்தால்தான் எழுதுவேன் என ஏடுகளில் எழுதிப் பெருமையடையும் சில பெருமகனுர்களிடை — உதகை சென்றால்தான்—மதுவைத்தந்தால்தான் — எழுத முடியும் எனும் 'அறைகுறை'களுக்கு இடையே இவருடைய இலக்கிய வருகை எரிச்சலைத் தந்ததில் வியப்பேது!

இவரைப் பற்றி எண்ணுகின்ற நமக்கோ வியப்பு! மலைப்பு!! இவரா என்றெதுமே ஒரு சுறுசுறுப்பு! இவரது படைப்புக்கள் மாற்றார்க்குத் தருவதோ கிறுகிறுப்பு!

இவர்—பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எழுத்தாற்றலிலிருந்து சிறிதுகூடப் பிசாகாத திறமையோடு நறுமணம் கமழும் நம்தமிழை, நல்லக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குச் சொந்தமாக்கியவர். மூடத்தனத்தின் வீசுகின்ற சமுதாயச் சேற்றினைச் சுத்தப்படுத்தும் கருவிகளாக இவரது ஒவ்வொரு படைப்பையும் வெளிக்கொணர்ந்தவர்.

சமுதாயம் ஏற்றிருக்கும் சங்கடங்களையும், அதைக் களைய வேண்டுமானால் நாம் காண வேண்டிய புரட்சி வாதங்களையும் நாடகங்களின் வாயிலாக, திரைப்படங்களின் மூலமாக அள்ளி அள்ளி வீசியவர்.

எத்தனையோ நபர்கள் திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதத்தான் செய்தனர். என்ன பயன் கண்டது தமிழ்? ஆனால் இவர்சொல்லாடல் செய்தபின்னரே. திரைத்துறைப்புரட்சி மலர்களைப் பூக்கும் பூங்காவனமாக மாறியது!

விளக்கெண்ணெய்ப் பேர்வழிகளால் விழித்தெழாத தமிழ்த் திரைப்படவுலகம், இவரது எழுத்தோவியங்கள் திரையில் எழிலார்ந்த நடையும், எதிர்கொண்ட பார்வையும் காட்டி ராஜநடை போட்ட பின்னரன்றோ 'தணிக்கைக் குழு' என ஒன்று இருப்பதே இந்தத் தமிழ்ப் பூமிக்குத் தெரிய ஆரம்பித்தது. தணிக்கைக் குழுவினருக்கோ சரியான தலைவலிதான் போங்கள்! குழுவின் கத்தரிகளுக்கு புதிய சாணைகள் தீட்டப்பட்டன! கண்ணிலே விளக்கெண்ணெய் மட்டுமா? காதில் கூர்மைகள் குடியேறின! அட்டாவோ! அவர்களும் அரசாங்கத்திற்கு நல்லவர்களாக இருந்துவிட்டபாடு......?

"கோவிலைத் தாக்கினேன் ...கோவில் கூடாது என்பதற்காக அல்ல...கோவில் கொடியவர்களின் கூடாரமாக......" இதுபோன்ற 'சக்தி மிக்க வசனச் சாட்டைகள் பராசக்திகப் பித்தர்களின் தோலுரித்துக் காட்டப் பயன்பட்டன.

என்னதான் அப்படி எழுதிவிட்டார்? மேலிடத்து 'லீலை'களையெல்லாம் மேதினியில் வாழும் பாமரரும்உணரும்படி இவரது வார்த்தைக் கோர்வைகளால் தோலுரித்துக் காட்டினார். படிப்பு வாசனையே இல்லாத பாமர மனிதனையும் இவரது எழுத்துச் சிதறல்களால் புதிய சிந்தனைக்கு உட்படுத்தினார்.

திரைப்படத் துறையில் பராசக்தி, மனோகரா, ராஜா ராணி போன்ற பரபரப்பூட்டிய படங்களைப் போல் ஒரு படம் இன்றும்...? இவரது இலக்கிய மணம் கமழும் வசனங்களுக்கு ஒரு 'பூம்புகார்' போதாதா? இந்தப் புரட்சிப்படைப்பாளர் மட்டும் ஒரு முழு நேர இலக்கியவாதியாக இருந்திருந்தால்......?

ஆனால். இந்தப் படைப்பாளர் ஓர் இயக்கத்தின் தலைமைப் பீடத்தில் இருந்து வந்த காரணத்தினால் தன் எழுத்தின் நோக்கமே தங்கள் இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்கே என்றவாறு முடிவு கண்டதால்தான் இவர் தேர்தல் கால நாடகங்களான 'சாந்தா அல்லது பழனியப்பன்', உதயசூரியன், 'காகிதப் பூ', 'நானே அறிவாளி' போன்றவைகளைப் படைத்தார்.

இவரது எழுத்தில் அரசியல் நெடி வீசும்; புரட்சி வெடிக்கும். அதனால் ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்களுக்கும், ஊரையும், உலகத்தையும் ஏமாற்ற நாடகமாடும் சந்தர்ப்பவாதகம் நடிகர்களுக்கும் மனதுதுடிக்கும்! ஆம்; எழுத்துப் பொய்மையாளர்களின் பகற்கனவுகளை ஒடிக்கும்!

இவரது எழுத்து அவனியை ஈர்க்கின்ற காந்தம்! இவரது எழுத்து, தமிழ்க்குல வண்டுகளை ஈர்க்கும் தரமான மல்லிகை! இவரது எழுத்து இரும்புள்ளங்களையும் பழுக்க வைத்து அடிக்கும் சம்மட்டிக்குத்துணைபுரியும் நெருப்பு! திரைப்படத் துறையைத் திருப்புமுனைக்கு ஆட்படுத்திய திருமகன் உணர்ச்சியுள்ள தமிழர்களின் ஒங்குபுகழ்த் தலைவன்! ஏன்? சுருங்கக் கூறின் தமிழுணர்ச்சி, தமிழர், தமிழ்நாடு போன்றவற்றில் நிறைந்து காணும் தமிழே இவர்! ஆம்; இவர் தமிழர்! தமிழனவர்!! ●

---

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

புதிய சந்தா
விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்றுமாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு.
அன்பகம், சென்னை-600018

---

## கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டனர்!

முப்பது வயதான மதன் என்பவரும், அவருடைய மனைவியும் 'திருமலை வெங்கடேசுவரப் பெருமானைத் தரிசிக்க' பெங்களூரிலிருந்து திருப்பதிக்கு வந்தார்கள். 'கோவிந்தா! கோவிந்தா...!' எனக் கூப்பாடு போட்டுக்கொண்டே படிகளேறிய அவர்களோடு நான்கு பேர்கள் சேர்ந்துகொண்டார்கள். நல்லவர்களைப்போல் பேசி நடித்து வந்த அந்த நால்வரும் மலை உச்சியை நெருங்கியபோது மதனையும், அவருடைய மனைவியையும் தாக்கி, துணியால் கட்டிப் போட்டார்கள்; விடுபடப் போராடிய மதனின் மார்பில் கத்தியால் குத்தி பதினொன்காயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகளைப் பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள்

தன்னை நம்பி வரும் பக்தர்கள் தாக்குதல்களுக்கும், வழிப்பறிகளுக்கும் அடிக்கடி ஆளாகியும் 'சர்வ வல்லமை' படைத்ததாகச் சொல்லப்படும் 'திருமலை வெங்கடேசுவரப் பெருமாள்' ஏனோ, பக்தர்களைக் காக்காமல் இப்படிச் சோதிக்கிறார்!

---

## சில காவல் அதிகாரிகளின் 'தேச பக்தி!'

பம்பாயிலிருக்கும் சில காவல்துறை அதிகாரிகளின் 'தேச பக்தியை(!)' என்னவென்று சொல்வது......

காவல்துறை அதிகாரிகளின் பொழுபோக்கிற்காக நிறுவப்பட்ட 'ரிக்ரியேஷன் கிளப்' ஒன்றில் இருந்த — மகாத்மா காந்தி, மூதறிஞர் இராஜாஜி ஆகியோரின் படங்களை கழற்றியெறிந்து விட்டார்களாம் அதிகாரிகள்.

எந்த இந்தியத் தலைவரின் படமும் இல்லாது, யாரோ ஒரு பெயர் தெரியாத 'மாஜி' காவல் துறை அதிகாரியின் படத்தை இப்போது சுவரில் தொங்க விட்டிருக்கிறார்களாம்.

---

## 300 ஆண்டுகளுக்குப் பிறகு....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று வெறுத்தொதுக்கும் எதையும் செய்யாதீர்கள்!'

தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்; மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளை நன்றாகப் பேசவும் எழுதவும் தெரிந்த குமார், தன்னுடைய 'இறுதி உரையை' இந்தியில் நிகழ்த்தினான். அவனுடைய குரல் தெளிவாகவும், அமைதியாகவும். ஒரே சீராகவும், ஒலித்தது.

பேசி முடித்ததும் குமார், தன்னுடைய நெருங்கிய சிறைத்தோழனான ஆஞ்சலோ என்பவனை அருகில் அழைத்தான். ஆஞ்சலோ. சிறையில் ஒரு கைகலப்பு நடந்தபோது ஒரு கைதியின் முகத்தில் ஓங்கி விட்ட குத்தில் அந்தக் கைதியின் இரண்டு பற்கள் உடைந்துவிட்டன.

குமார் அவனுக்குப் புத்திமதி கூறினான் ;— "இனிமேல் இப்படிச் செய்யாதே. உன்னால் குத்து வாங்கிப் பற்களை இழந்தவன் இறைச்சி சாப்பிட வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள். பாவம். என்ன செய்வான் அவன்?''

உலகத்தைப் போர்த்தியிருந்த இருட்திரை முற்றும் விலகாதிருந்த வேளையில் — அதிகாலை 5-45 மணிக்குக் குமார் பேசத் தொடங்கினான். 5-55 வரை—பத்து நிமிடங்கள்—அப்பேச்சு நீடித்தது. பிறகு தூக்குமேடையை நோக்கி நடந்தான். நடக்கும்போது ஆங்கிலத்தில் தனக்குத்தானே "இறைவா, இதைத் தாங்கிக் கொள்வதற்கான வலுவை எனக்குக் கொடு" என்று வேண்டிக் கொண்டான். அவனுடைய முகம் கறுப்புத் துணியால் மூடப்பட்டது; சரியாக ஆறு மணிக்குத் தூக்கிலிடுவோனின் (Hangman) கரம் விசையை நோக்கிச் சென்றது!

சில நிமிடங்கள் கழித்து—துடிப்புகள் அடங்கிய பிறகு—குமாரின் உயிர்ப் பறவை உடலிலிருந்து 'சட்'டென்று பறந்து சென்றது

இப்போது சிறைச்சாலை அதிகாரியான பி. எஸ் பன்வார் என்பவர் வெளிநாடுகளுக்குப் பயிற்சி பெறச் சென்றுள்ளார்—அவர் பெறப்போகும் பயிற்சி— ஒரு மனிதனை எப்படித் தூக்கிலிடுவது?'' என்பது பற்றித்தான்! ●

---

அரிய வாய்ப்பு, குறுகிய சந்தர்ப்பம்!

எங்களது தவணைமுறை
திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்!


**எம். கே. டிரேடர்ஸ்,**
41, ரங்கராஜபுரம் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.
—: கிளை :—
50, ஏரிக்கரைத் தெரு. மேற்கு மாம்பலம். சென்னை-33.

எங்களிடம் ரேடியோ, டிரான்சிஸ்டர், ஸ்டீல்பீரோ, சைக்கிள் சோபா, மின்விசிறி மற்றும் வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும் ரொக்கத்திற்கும் தவணை முறையிலும் கிடைக்கும்.

உரிமையாளர் :— O. Y. A. முகமது மைதீன்.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை-11
தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
12, அழகர்கோவில் சாலை, 72, டவுன்ஹால்ரோடு, மதுரை.



# தமிழினத் தலைவரின் மதுரைத் திருவுலா!

நஞ்சிலேயே புழுத்த புழு நஞ்சுக்கு அஞ்சுமா? எதிர்ப்பிலேயே வளர்ந்து எதிர் நீச்சல் போட்டு வரும் ஓர் இலட்சிய வீரன், எங்கோஒரு மூலையில் எழும் சலசலப்புக் கண்டு அஞ்சுவானு?

சிறுநரியின் ஊளை கண்டு சிங்கம் அடங்கி ஒடுங்கி விடுமா?

இப்படித்தான் தப்புக் கணக்குப போட்டுப் போட்டுத் தமிழ் நாட்டு அரசியலில் பலர் 'தோல்வி யையே தொடர் கதையாக்கிக் கொண்டு வருகின்றனர்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மதுரைக்கு வருகை தருகிறார் என்ற செய்தி வெளியானவுடனேயே 'மண்டூக'க் குரலெடுத்து முழங்கினர் ஒரு 'மாவீரர்!'

"மதுரைக்கு வராதே; வந்தால் கறுப்புக் கொடிக்குத் தப்ப மாட்டாய்" என்று!

விளைவு என்ன?

கலைஞர் தமது பயணத்தையே கைவிட்டு விட்டு, மூலையில் போய் முடங்கி விட்டாரா?

இட்டமிட்டபடியே மதுரை வருகிறார் கலைஞர், கோடைரோடிலிருந்து மதுரை மாநகர்வரை28கல் தொலைவு சாலையின் இருமருங்கிலும் இலட்சோபலட்சம் மக்கள் திரண்டிருந்து, வாழ்த்தொலி முழங்கி வரவேற்கிறார்கள்!

மதுரை நகரில் தலைவர் சென்ற வழிகளிளெல்லாம் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடிநின்று வரவேற்றனர். தலைமை நிலையபிரச்சார வேனில் நின்றவாறே தலைவர் கைகளைக் குவித்தும் அசைத்தும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தலைவரின் காருக்குப் பின்னே பலகார்களில் கழகக் கண்மணிகள் சென்றனர். மதுரை மாவட்டத்திலிருந்து மட்டுமல்லாது திருச்சி முகவை, நெல்லை மாவட்டங்களிலிருந்தும் கழகத்தவர் திரண்டு வந்திருந்தனர் தலைவரை வரவேற்க.

**சித்திரைத் திருவிழாவுக்கு முன்வந்த முத்திரை விழாவாகத் திகழ்ந்தது தலைவர் கலைஞரின் தென் மதுரைத் திருவுலாக் காட்சி!**

கழகத் தோழர் பழக்கடை பாண்டி இல்லத்திருமணவிழாவிற்குத் தலைமை வகித்து நடத்தி வைத்தார் கலைஞர்.

அன்று மதுரை பந்தயத் திடலில் நடந்த பிருமாண்டமான சிறப்புக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் இலட்சிய முழக்கமிட்டார்.

இச்சிறப்புக் கூட்டத்தில் நுழைவுக் கட்டணமாக வசூலான தொகை மட்டும் ரூபாய் ஐம்பதாயிரம்!

சிறப்புக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மன்னை, தலைமை நிலையச் செயலாளர் ஆற்காடு வீராசாமி, சென்னை மாவட்டச் செயலாளர் ஆர். டி. சீதாபதி வை. கோபாலசாமி எம். பி., மதுரை முகவை மாவட்டப் பிரசாரச் செயலாளர் எஸ். எஸ் தென்னரசு; திருமதி சுந்திகோதண்டம், தீப்பொறி ஆறுமுகம், அக்கினிராசு, தாவூத். மலைச்சாமி மாவட்டச்செயலாளர்களான மலைக்கண்ணன், தங்கபாண்டியன் எம். எல் ஏ திருச்சி எம். எஸ். வெங்கடாசலம், நெல்லை கா. மு கதிரவன், மதுரை பொன்முத்துராமலிங்கம், திரவியம், (குமரி) புதுக்கோட்டை பெரியண்ணன், ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் எஸ். எஸ். தென்னரசு தாம் எழுதிய "தென்னிந்தியாவின் போர் வாள் கலைஞர்' என்னும் நூலை வெளியிட்டு, முதல் பிரதியைத் தலைவர் கலைஞரிடம் வழங்கினர்.

இவ்வளவு சீரும் சிறப்புமாக மதுரையில் நடைபெற்ற ஒரு நாள் நிகழ்ச்சிகள், மக்கள் நினைவிலிருந்து மறைய இன்னும் . நெடு நாளாகும்.

ஆனல் இந்த நிகழ்ச்சிகளைத்தான் நடவாமல் தடுத்துவிடலாம் என மனப்பால் குடித்து, பாழ்த்த குரலெடுத்து முழங்கினர் சிலர்.

என்ன ஆயிற்று கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்?

நடத்தியிருந்தால் பிசுபிசுத்துப் போயிருக்கும்! நடபெறவே இல்லை; நடக்கவே முடியவில்லை!

சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்பார்கள்!

கறுப்புக்கொடி என்னும் எதிர்ப்புச் சங்கை மட்டும் அந்த 'மாவீரர்கள்' ஊதாதிருந்திருப்பார்களேயானல், கலைஞரின் மதுரை வருகை இந்த அளவுக்கு அகில இந்திய முக்கியத்துவம் பெற்றிருக்காது.

தமிழகத்து மூப்பனரிலிருந்து அகில இந்திய கட்சி மூலவரான இந்திராகாந்தி வரை, சிந்தித்துச் செயல்படவைத்திருக்கிறது இந்தமதுரை நிகழ்ச்சி!

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் எதிர்ப்புக்கோ சலசலப்புக்கோ அஞ்சித் தமது பயணத்தையே கைவிட்ட நிகழ்ச்சி! அவரது வாழ்க்கையில் எப்போதாதாவது நடந்ததுண்டா?

கறுப்புக்கொடியா—எதிர்ப்புக்குரலா அதையும் பார்த்துதான் வருவோமே என்று கலைஞர் கிளம்பினர் மதுரைக்கு!

'கல்லக்குடி'யை விடவா இது கடுமையானது! 'பாளையங்கோட்டையை' விடவா இது பயங்கரமானது! 'கோட்டூரை' விடவா இதுகொடுமை இழைக்கக்கூடியது!

**'களம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம் - கிழித்தெறியத் தேடுது காண்பகைக்கூட்டத்தை'**

என்று முழங்கினரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்! அந்த முழக்கம்தான் அன்றைய மதுரை நிகழ்ச்சியைக் கண்டவர்களுக்கு நினைவுக்கு வந்திருக்கும்.

கறுப்புக்கொடி காட்டப் போவதாக வந்த செய்தி கண்டு கலைஞரோ, கழகத் தொண்டர்களோ அஞ்சவில்லை.

ஆனல் கறுப்புக் கொடி காட்டப் போவதாக அறிவித்த கட்சிக்காரர்களின் மேலிடமே கலங்கி விட்டது. கறுப்புக் கொடி நிகழ்ச்சி நடவாமல் தடுத்து நிறுத்தக் கடைசி நிமிடம் வரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கறுப்புக் கொடி நிகழ்ச்சி நடந்திருந்தாலும் நடத்திராவிட்டாலும் கழகத் தலைவரின் மதுரைப பயணம் 'வீரத் திருவுலாதான்' — 'வெற்றி திருவுலாதான்'

கலைஞரின் வருகையை கறுப்புக் கொடி மிரட்டல் மூலம் தடுத்து நிறுத்திட எவராவது முனைந்தால், அது, உதயசூரியனை ஓட்டைக் குடையால் மறைத்து விடலாம் என்று கூறும் பைத்தியக்காரச் செயலையொத்ததேயாகும்!

கலைஞர் பயணம் . ஒவ்வொன்றும் இலட்சியபுரி நோக்கி நடத்தும் வீரத் திருவுலாவாகும். இதனைத் தடுத்திட எந்தச் சக்தியும் இல்லை என்பதை இந்தத் தென்மதுரைத் திருவுலா' எடுத்துக் காட்டிவிட்டது.

- மா. செ.

# நான் ஓர் ஆயுள் கைதி!

-: கவிஞர் குடியரசு :-

நான் கழகத்தின் ஆயுள் கைதி என்னைத் தண்டித்தவர்கள் மூன்று நீதிபதிகள்! பெரியார் அண்ணா-கலைஞர்-இதுதான் அந்த (Full Bench) புல்பெஞ்ச்

நான் மட்டுமல்ல; என்னைப் போல லட்சக் கணக்கானோர்; நாங்கள் ஏன் கைதிகளானோம்-என்ன குற்றம் செய்தோம்? எங்களுக்கு இனப்பற்று இல்லாமலிருந்தது; இது முதல் குற்றம்!

எங்களுக்கு மொழிப்பற்று இல்லாமலிருந்தது. இது இரண்டாம் குற்றம்!

சாதியும் சாமியும் எங்களைச் சுரண்டுவதற்கு இடங் கொடுத்தோம்! இது மூன்றும் குற்றம்!

இந்த மூன்று குற்றங்களும் வள்ளுவன் வகுத்த சட்டப்படி மன்னிக்க முடியாதவை!

அதனால் கழகத்தில் ஆயுள் கைதிகளாக அடைக்கப்பட்டோம்!

சிறையில் எங்களுக்குத் தரும் உணவு, வெறும் கலித்தொகைக்களியும், புறநானூற்றுப் புட்டும்தான். நாகரிகத் துருவேறிய அந்தத் தொல்காப்பியத் தட்டில்தான் இவைகளை 'வாங்கிச் சாப்பிட வேண்டும்' சிலம்பு குலுங்கியடன் நாங்கள் வரிசையாக உட்கார வேண்டும்.

அதுவும் 'அகவல்' அசைகளைப்போல் அசையாமல் உட்காரவேண்டும்.

மாலை நேரத்தில் ஒரிரு "பத்துப்பாட்டை" ஒலி பரப்புவார்கள். சில நேரம் 'முத்தொள்ளாயிரம்'' நேயர் விருப்பமாகப் போடுவார்கள்!

எங்கள் நெற்றியில் மதக் கிறுக்கல் இருந்த இடத்தில் இப்போது பகுத்தறிவுச் சுருக்கங்கள் குடியேறி விட்டன!

அடிக்கடி எங்களைத் தண்டித்த நீதி தேவர்கள் சந்திப்பதுண்டு!

எங்கள் குறைகளைக் கேட்பார்கள்!

'உங்களுக்கு விடுதலை?' தேவையாஎன்று கேட்பார்கள் 'சிறையே முறையாக இருக்கிறது-விடுதலை வேண்டாம்', என்று கூறுவோம்!

வெளியே போனால் நாங்கள் மூட நம்பிக்கைக்கு முழுதும் பலியாகி விடுவோம். 'உஷார் விடுதி' யே எங்கள் முகவரி ஆகிவிடும்!

தன்மானம் இல்லாமல் தரையில் இருப்பதை விடச் சிறையில் இருப்பதே மேல்!

இப்போது நாங்கள் வெளியே இருப்பவனைவிட வீரமாக இருக்கிறோம்!

எங்களுக்கு இராகு காலம்-எமகண்டம் பயம் இல்லை-எப்போதும் வேலையைத் தொடங்குகின்றோம்-சிறை விதி அப்படி!

இங்கே சாதிப் பாகுபாடில்லை-எல்லோரும் கைதிகளே!

இப்போது மூன்று பேரில் ஒரே ஒரு நீதி தேவன்தான் எங்களை அடிக்கடி சந்திக்கிறார்.

முதல் இரண்டு நீதி தேவர்கள் மரண வாசலில் தோரணமாகத் தொங்கி விட்டார்கள்!

கடைசியாக வாழ்ந்து கொண்டிருப்பவர் கலைஞர் மட்டுந்தான். அவர் எங்கள் சிறையில் பூத்த சின்ன மலர்

எங்களைக் கழகத்தில் அடைத்த கடைசி நீதிபதி

நெருக்கடிக் காலத்தில் அந்த நீதி தேவனுக்கே தடை விதித்தார்கள்.

அவன் எங்களைச் சந்திக்க வருவதில்லை; அவன் கடிதம் மட்டும் வரும்!

சிறை ஆயிற்றே அந்தக் கடிதத்தையும் 'சென்சார் செய்தே அனுப்பினார்கள்!

சர்வாதிகாரம் சாப்பிட்டு மீதி வைத்த அந்தக் கடிதத்தை அலசி ஆராய்வோம்!

அந்தக் கடிதம் என்ன இருக்குறளா?-ஒரு சீரை எடுத்து விட்டால் பொருள் புரியாமல் போவதற்கு! அதுதான் தாய்'ராக'மாயிற்றே! ஒரு 'ஸ்வரம்' குறைந்தால் கூட; தாய் ராகத்தின், சாயல் ஜன்ய' ராகத்தில் விழுந்து விடுமே இந்தரகசியம் சர்வாதிகாரிக்குத் தெரியாது-சங்கீத வித்வானுக்குத் தெரியுமே!

அவனே ஓர் இசை வேளாளன்!

அவன் கடிதம் ஓர் பைரவி 'ராகம்; அந்தக் கடிதத்தைத் தணிக்கை செய்தால் பைரவி-ஆனந்த பைரவி ஆகிவிடும் அவ்வளதான்.

இன்னும் தணிக்கை செய்தால் அதுவே ஹிந்தோளமாகி விடும்-மூல ராகத்தின் சாயல் மாறாது!

இன்னும் கைவைத்தால் அதுவே 'சாரமதி'' ஆகும்!


ஆனால் நிச்சயமாக பைரவி அரிகாம்போதி ஆக வாய்ப்பில்லை.

இந்த வகையில் கலைஞரின் கடிதத்தைச் சிறையில் படிக்கும்போது மூலராகத்தின் சாயல் எங்களுக்குத் தெரிந்து விடும்.

கழகச் சிறையில் அவர் கடிதம் ஒன்றுதான் எங்களுக்கு நிரந்தர நிம்மதியாக இருக்கிறது!

என்னைப் போன்ற பள்ளத்தாக்குக் கைதிகளுக்கு அவர்தான் 'புதையல்'!

தோண்டி எடுத்துக் கொள்ளக்கூட எனக்கு மனம் வரவில்லை-காரணம் நானோர் கஞ்சன்! நான் மடிந்த பிறகு யாராவது அனுபவிக்கட்டும் எனக்குச் சிறையே போதும்!




(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துவதால்தான் அவர்கள் வெற்றி பெறுவதில்லை.

அந்நிய தத்துவங்களிலே தங்களை முடக்கிக் கொண்டுள்ளதால் இந்நாட்டின் மனவளத்திற்கேற்ப நிலைமையை மாற்றிக் கொள்ளாததால் மூடக் கொள்கையிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள முடியவில்லை, அதற்கெல்லாம் மூல காரணம், சாதி ஒழிப்புப்பணி சரியாக நடத்த ஓர் இயக்கம் அங்கே இல்லை என்பதுதானே?

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பகுத்தறிவுத் தலைவர் தந்தை பெரியாரின் தொண்டு பத்திரிகை வாயிலாக வட புலத்திலே சரியாயாகப் பரப்பப் படவில்லை. அங்குள்ளோர் பெரியாரைப் பயன்படுத்திக் கொள்ளவும் இல்லை

தமிழகத்தைப் பொறுத்தவரை தந்தை பெரியார் அறுபதாண்டுக் காலம் அயராது உழைத்து சாதியின்கொடுமைகளைத் தகர்த்தெறிந்தார். மத வெறியையும் மாய்த்தார்; மாய்மாலங்களையும் மண்ணுக்குள் புதைத்தார். பொதுவுடைமை பூத்திட தமிழகத்தின் மண்ணைப் பண்படுத்தினார்,

தந்தை பெரியாரைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா பெரியாரின் தொண்டினைத் தொடர்ந்தார். ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததும் பெரியாரின் இலட்சியங்களை சட்டத்தின் மூலமாக நிறைவேற்றினார்.

அண்ணாவின் அடிச்சுவட்டிலே அயராது பணியாற்றி வரும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயம் தலை நிமிர்ந்திட அவர்களுக்கு உறவினராகி தாமே ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறார்.

சொல்லில் வல்லவர் மட்டுமின்றி செயலிலும் வல்லராகி சிறப்புப் பெற்றார். சாதிகள் ஒழியவும் மூடப் பழக்க வழக்கங்கள் முறியடிக்கப்படவும் சண்ட மாருதமெனச் செயலாற்றி வருகிறார்.

இன்று பீகாரில் கொந்தளிப்பு; என்று இந்தியாமுழுதும் பீகார் ஆகுமோ சொல்ல முடியாது. இந்நிலை போக்கிட கலைஞரின் ஆக்கபூர்வமான பணிகள் அனைத்திந்தியாவுக்கும் எப்போது கிட்டுமோ அப்போதுதான் இந்தியாவுக்கு விடிவுகாலம் தோன்றும் பொருளாதார முன்னேற்றம் மட்டும் நாட்டை இந்தக் கொந்தளிப்பில் இருந்துமீட்டு விடாது! சமுதாயமறுமலர்ச்சி பணியும் ஒரே நேரத்தில் தொடர்ந்து நடந்தால்தான் பீகாரில் வீசுகின்ற புயல் தொடராது; இந்தியா முழுவதும் படராது,

தந்தை பெரியாரின் சமுதாயப்பணியும், காரல் மார்க்சின் பொருளாதாரக் கொள்கையும் இணைந்து நிற்கும் இயக்கமே முன்னேற்றக் கழகமாகும்.

அந்தப் புனிதப் பணியினை தி. மு கழகம் தொடர்ந்து ஆற்றி வருகிறது. இந்தப்பணியினை இந்தியாவிலுள்ள ஏனைய அரசியல் இயக்கங்களும்ஏற்று நடத்திட முன்வர வேண்டும், கலைஞர்ஒரு கலங்கரைவிளக்கு அந்த விளக்கின் வெளிச்சத்தில் மற்ற மாநிலங்களும் கரை சேரட்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.